சிவாஜி

P4

நம்பிக்கை "பாஷன்"கள்

பகுத்தறிவுப் பட்டயக்காரர்கள்

பர்னுட்ஷாக்கள் தேவைதான்

அடிப்படையை மாற்றவல்ல அழுக்கைத் துலக்குதற்கு

சென்ற வாரத்துக்கு முந்தைய வாரத்து 'சிவாஜி' இதழில் 'இலக்கிய விசாரம்' என்ற தலைப்பில் நான் எழுதியிருந்த கட்டுரையில ஒரு சில வரிகளுக்கு இன்றைய 'பகுத்தறிவுப் பட்டய' ஏடு ஒன்றில் எதிரொலி வந்திருக்கிறது.

அந்த எதிரொலி இன்றைய பகுத்தறிவுப் பட்டயக்காரர்கள் பிறப்பதற்குப் பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் இவர்களின் மூதாதைப் பரம்பரைகளிலே பிறந்த குழந்தைகளால் எத்தனையோ ஆயிரம் தடவை கொடுக்கப்பட்டுத் தன் அசட்டு பலஹீனத்தால் பல்லுடைபட்டுப் போயிருக்கிறது. இதில் இன்னொரு வேடிக்கையென்னவென்றால் இன்றைய 'இங்கர்ஸால்களும்', 'பிராட்லா'க்களும், பிளிமத் சகோதரர்களும் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகார்ஜுனர்களும், சாக்கியர்களும் இந்த அமெச்சூர் பகுத்தறிவாளர்களுக்குப் புரியாத முறையில் பெரிய நாஸ்திகவாதங்கள் (உண்மையில் இவர்கள் நாஸ்திகர்களல்ல. பேரறிவு படைத்து உயிரியக்கத்தை ஆராயும் சக்தி வாய்ந்தவர் நாஸ்திகர்களாயிருந்ததில்லை) நடத்தி விட்டுப் போய்விட்டார்கள். (நாகார்ஜுனனைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுபவர்கள் "மிளிந்த சம்வாதத்தை" எடுத்துப் பார்த்துக் கொள்ளலாம்.)

இந்தக் கட்டுரையில் மதத்தைப் பற்றியும் கடவுளைப்பற்றியும் விரிவாக ஆராய்வது என் கருத்தில்லையானாலும் இடையிடையே இவை சம்மந்தமான விஷயங்களின் தொடர்புடன் நம்பிக்கை 'பாஷன்'களைப்பற்றி சிறிது விரிவாகக் கூற விரும்புகிறேன்.

ஃ ஃ ஃ

நம்பிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்கு முன்னால் நாம் ஒரு முக்கிய விஷயத்தை புரிந்துகொள்ள வேண்டும். உலகத்தில் இருக்கும் கோடானகோடி மக்கள், கடவுளை நம்புபவர், கடவுளை நம்பாதவர் என்று இரு சாரராகப்பிரிந்திருப்பதாவுகம் இவர்கள் ஒருவரோடு ஒருவர் கல்லையும், மண்ணையும் (இந்தக்காலத்தில் துப்பாக்கியையும், அணு குண்டையும்) எடுத்துப்போட்டுக் கொண்டு சண்டையிடுவதாகவும் நினைத்துப் பலபேர் திண்டாடி வருகிறார்கள்.

கடவுளைப்பற்றியும், உயிரியக்கத்தைப்பற்றியும் சிந்தனை செய்து சண்டைபோட்டுக் கொள்ள நேரமும், தகுதியும் உடையவர் விரல்விட்டு எண்ணிவிடக்கூடியவர்களே என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்

நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர்லோகாயதமாகத் தங்கள் அன்றாட சோற்றுப் பாட்டையே கவனிக்கப்போதிய பொழுதின்றித் தவித்து வருகிறார்கள், இவர்களைப்போய் சண்டையில் இழுத்துப்போட்டுத் தொந்தரவு செய்ய வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

நம்பிக்கைகளில்லாமல் உலகம் என்றும் இயங்கினதில்லை. இன்றும் இயங்குவதில்லை. என்றும் இயங்க முடியாது, இந்த நம்பிக்கைகள் "ஷர்ட்", "காலர்" பாஷன்களைப் போலவும், "டான்ஸ்" பாஷன்களைப் போலவும் காலத்துக்குக்காலம் மாறி வருகின்றன. இப்படி மாறும் போது நேற்றைய நம்பிக்கை பாஷன் இன்றைய மூடநம்பிக்கையாகப் போய்விடுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

இந்த வாரத்தில்

ஜீஜாவும், ஷாஹஜியும்

ஜெமினி சக்ரதாரி—பட விமர்சனம்

சிறுவர் மலர்

வினோதச் செய்திகள்

வேடிக்கைகள்

டாம் ஜிம் ஜாக்.

பல சுவையான விஷயங்கள்.

12-12-48

விலை அணா 2



இரண்டாம் அத்தியாயம்

ஜீஜாவும் ஷாஹஜியும்

சிறிது நேரம் மௌனமாயிருந்த பிறகு திடீரென்று "எத்தனை அழகான பொருத்தம்!" என்று தம்மையும் மீறி அளவுகடந்த ஆனந்தத்துடன் கூறினர் லாகோஜி.

மாலோஜி இதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தார். லாகோஜியின் சொற்கள் அவருக்கு எதிர்பாராத இன்ப போதையை அளித்தன. உள்ளம் கனவிலும் தான் காணமுடியாத வெற்றிக்களிப்பை எய்தியது. "சபையோர்களே, ஸ்ரீமான்களே, சகோதரர்களே!" என்று ஆவேசம் வந்தவர்போல் கூச்சலிட்டு எல்லோரது கவனத்தையும் கவர்ந்தார் மாலோஜி. எல்லோரும் அவர்பக்கம் திரும்பி நெருங்கி வந்தார்கள்.

"ஸ்ரீமான் லாகோஜியின் சொற்களை கவனித்தீர்களா? அவர் நிச்சயதார்த்தம் நடத்திவிட்டார்," என்றார் மாலோஜி.

லாகோஜிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் இத்தகைய அதிர்வெடியை எதிர்பார்க்கவில்லை. மாலோஜியின் பேச்சைத் தமாஷாகக்கருதி அவர் பலமாகச் சிரிக்க முயன்றார். ஆனல் அவரால் தாராளமாகச் சிரிக்க முடியவில்லை. மாலோஜியின் துடுக்கு—அவர் அப்படித்தான் நினைத்தார்–அவரைக் கலங்க வைத்து விட்டது என்றே கூறலாம். வேறொரு சந்தர்ப்பத்தில் இப்படி நடந்திருந்தால் லாகோஜி கோபாக்கிராந்தராக ஆகியிருப்பார்.

அப்புறம் வேறுபேச்சு நடக்கவில்லை. லாகோஜி அந்தச் சிறுமியின் அருகேசென்று அவளது தளிர் விரல்களைப்பற்றி "குழந்தை ஜீஜா, விளையாட்டுப் போதும்!" என்று கொண்டே அவளை தூர அழைத்துச்சென்றுவிட்டார்.

—

மாலோஜியின் முகம் சுண்டிவிட்டது. அவரது கண்களில் வைராக்கியப்கூட மின்னிற்று. சிறுவன் அருகே சென்று "ஷாஹஜி, வா போகலாம், கண்ணே. உனக்கும் விளையாட்டுப்போதும்" என்றுகொண்டே அவனை அழைத்துக்கொண்டு மாளிகையைவிட்டு வெளியேறினர் மாலோஜி.

லாகோஜியும் மாலோஜியும் ஏன் இத்தகைய உணர்ச்சிப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்? இதைப்புரிந்துகொள்ள அவ்விருவரைப்பற்றிக் கொஞ்சம் விளக்கமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

அஹமத் நகர ராஜ்ஜியம் தட்சிணத்தில் இருந்த பாமினி சாம்ராஜ்யத்தின் சிதறிய பகுதிகளில் ஒன்றாக இருந்தது. இந்த சாம்ராஜ்யம் முஸ்லிம் ஆதிக்கமாயிருந்தபோதிலும் மராத்தியரும், ஏனைய ஹிந்துக்களும் ராஜாங்க உத்தியோகங்களிலும், படைகளிலும் கௌரவத்துடன் சேவை செய்து வந்தார்கள். பாமினி சாம்ராஜ்யத்து சுல்தான்களின் அந்தரங்க ஆலோசகர் பெரும்பாலும் ஹிந்துவாகவே இருந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தக்காலத்தில் பிரபுத்துவ முறையே அரசாளும் கருவியாக எங்கெங்கிலும் இருந்து வந்தது. பிரபுக்களை சிருஷ்டித்து, அவர்களது உதவியுடன் ஆட்சி நடத்தப் பொன் சேர்த்தும், படைதிரட்டியும் தட்சிணத்து சுல்தான்கள் செங்கோலோச்சி வந்தார்கள்.

அஹமத் நகரத்தில் செல்வாக்கு படைத்திருந்த ஹிந்து பிரபுக்களில் லாகோஜி முதன்மையானவர். சுல்தானின் நட்பும், நெருங்கிய தொடர்பும், கணக்கற்ற செல்வமும் அவரை எத்தகைய சமூக ஸ்தானத்தில் நிலைநிறுத்தியிருக்கும் என்று ஊகிப்பது சிரமமான காரியமல்ல.

மாலோஜிக்கு பிரபுத்துவம் கிட்டவில்லை. மலைச்சரிவிலிருந்து இறங்கி வந்த வீர மராத்தியப் பண்புடன் அகமத் நகர சுல்தானின் படையணியில் சேவை செய்யும் பாக்கியமே அவருக்குப் பெரிய பாக்கியமாக இருந்தது.

இத்தகைய ஏற்றத் தாழ்வுள்ள இருவரிடையே பரஸ்பரம் எத்தகைய மதிப்பீடு இருந்திருக்க முடியும்?

லாகோஜியின் கண்களைக் குழந்தைகளின் இனிய விளையாட்டு கவர்ந்தபோது அவர் தமது அந்தஸ்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கவில்லை. குழந்தையுள்ளத்துடன் குழந்தைகளைக் கவனித்து ரஸித்தார்-அவ்வளவுதான். லாகோஜியின் நாவினின்று தற்செயலாகத் தெறித்த வார்த்தைகளை மாலோஜி தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்றபோது உள்ளே பதுங்கியிருந்த அந்தஸ்து துடித்தெழுந்துவிட்டது.

மஞ்சள் நீரை ஊற்றி விளையாடிக்கொண்டிருந்த அவ்விரு குழந்தைகளில், சிறுமி லாகோஜியின் செல்லப் பெண் ஜீஜா. சிறுவன் ஷாஹஜி மாலோஜியின் பிள்ளை. மாலோஜி சந்தர்ப்பத்தைப்பயன் படுத்திக்கொண்டு ஜீஜாவுக்கும் ஷாஹஜிக்கும் எப்படியாவது திருமணம் முடித்து வைத்துத்தன் அந்தஸ்தையும் இந்த சம்பந்தத்தின் மூலம் உயர்த்திக்கொள்ள விரும்பினர். ஆனல் லாகோஜிக்கு அவ்வளவு சுலபத்தில் மனம் இடங்கொடுத்து விடுமா!

ஃ ஃ ஃ

மாலோஜி சற்றுப் புண்ணடைந்த மனத்துடனும் எப்படியும் லாகோஜியை அவருடைய வாக்குக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உறுதியுடனும் தனது இருப்பிடம் சேர்ந்தார். ஷாஹஜிக்குத் தந்தையின் செய்கை புரியவில்லை.

"ஜீஜா அழகாக இருக்கிறளா கண்ணே" என்று மாலோஜி கேட்டபோது "ஆமாம், அப்பா, நீ பார்க்கவில்லையா? ரொம்ப ரொம்ப அழகாயிருக்கிறள்" என்றான் குழந்தை ஷாஹஜி.

மாலோஜி மனதுக்குள் சிரித்துக்கொண்டிருந்தபோது வாயிலில் சுல்தானின் சேவகன் வந்து நின்று கூப்பிட்டான். மாலோஜி எழுந்து சென்றார். மண்டியிட்டு வணங்கிய சேவகன் சுல்தான் அவரைக் கையோடு அழைத்துவரச்சொன்னதாகக் கூறினன்.

மாலோஜி இத்தகைய அவசர உத்திரவை எதிர்பாராததால் கலவரமும், குழப்பமும் அடைந்து வேகமாக அரண்மனையை நோக்கிக்கிளம்பினர்.

சுல்தானது அந்தரங்க அறைக்குள் சேவகன் மாலோஜியை அழைத்துச் சென்றான். மண்டியிட்டு வணங்கியவாறே மாலோஜி "என்ன உத்திரவு, சுல்தான்" என்று அடக்கமாக மெல்லிய குரலில் கேட்டபோது சுல்தான் சிரித்துக்கொண்டே அவரை அருகே அழைத்தார். சேவகன் அறையின் வாயிற்படியிலிருந்து விலகி தூரச் சென்றுவிட்டான்.

"மாலோஜி, ஹோலி பண்டிகையில் என்ன நடந்தது?" என்று கேட்டார் சுல்தான்.

"பண்டிகை வழக்கம்போல் வேடிக்கையாக இன்பக் கொந்தளிப்பில்தான் மிதந்தது" என்று பதிலுரைத்தார் மாலோஜி.

"அதைக் கேட்கவில்லை பண்டிகையில் உமக்கும், லாகோஜிக்கும் இடையே நடந்த ...... அதைக் கேட்கிறேன்" என்று கொண்டே சிரித்தார் சுல்தான்.

சுல்தானது இன்பகரமான உள்ளப் பாங்கையும், தன்மனத்தை வாட்டிக்கொண்டிருந்த ஒரு பிரச்னையைப்பற்றி அவர் எப்படியோ தெரிந்துகொண்டு அக்கரை காட்டுவதையும் கவனித்த மாலோஜிக்கு வியப்பும், இன்பவேதனையும் கலந்து குழப்பிற்று.

மாலோஜி சொற்களை அளந்து பேசி நிதானத்துடன் பண்டிகையில் நடந்த சம்பவத்தைக் கூறினர்.

லாகோஜியைப் பற்றி எவ்வித கௌரவ விரோதமான சொல்லையும் அவர் பிரயோகித்துவிடவில்லை. தன் ஆசையை இலேசாக வற்புறுத்திக்கொண்டே, "என்ன இருந்தாலும் அவர் பிரபு, நான் பட்டாளத்தில் ஊழியம் செய்பவன். ஏதோ ஆசை...... ஆசைக்கு எல்லையேது?" என்றும் பூசிவைத்தார் மாலோஜி.

"ஷாஹஜிக்கும், ஜீஜாவுக்கும் நல்ல பொருத்தம்தான். லாகோஜியைப் போலவே நாமும் அப்படித்தான் கருதுகிறோம். உமது அந்தஸ்தைப் பற்றி லாகோஜி கவலைப்படவேண்டியதில்லை. உமக்கு இன்றிருந்து ஐயாயிரம் வீரர் கொண்ட குதிரைப் படைக்குத் தலைமை தந்திருக்கிறேன். வீரமான்யமும் வழங்கியிருக்கிறேன். ஷாஹஜிக்கு ஜீஜா கிடைப்பாள். நீர் போகலாம்" என்றார் சுல்தான். மாலோஜி ஸ்தம்பித்து நின்றுவிட்டார். நினைவை அவசரமாகத் தெளிவித்துக்கொண்டு சுல்தானைப் பன்முறை வணங்கிவிட்டுப் பூரிப்புடன் இருப்பிடம் சேர்ந்தார்.

(தொடரும்)

திருச்சி வெலிங்டனில்
11—12—48 முதல்
மகத்தான 3-வது வாரம்
T. S. துரைராஜ்
நடிக்கும்
பிழைக்கும் வழி
— நடைபெறுகிறது —

சிவாஜி
ஆசிரியர் :—திருலோக சீதாராம்
மாலை 14 | திருச்சி, 12—12—48 | சர்வதாரி-ஆு கார்த்திகை-மீ, 27-உ | மணி 2

திருச்சி ராக்ஸியில்
7—12—48 முதல்
பி. எஸ். ரத்னபாய்
பி. எஸ். சரஸ்வதி பாய்
நடித்த
சைரந்திரி
அல்லது
கீசகவதம்
முழு கலர் படம்

குவிந்த குன்றுகளும் மலர்ந்த மணற்பாங்கும்

காடு வெட்டி நிலம் திருத்தி...

காங்கிரஸ் விழாத்தலம் காந்தி நகரம்

இந்திய தேசீய காங்கிரஸின் 55-வது சம்மேளனத் திருநாள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. மகத்தான அரசியல் மாநாடுகளும், கண்காட்சிகளும், கலைக்காட்சிகளும்நிறைந்திருக்கும் இந்தத் திருவிழா.

முன்பெல்லாம் காங்கிரஸ் சம்மேளனம் கூடுகிறதென்றால் அதன் பெருமையே அலாதி. அத்தக்காலத்தில் காங்கிரஸ் அதிகார அரியணை ஏறவில்லை. நாட்டின் விடுதலைக்காகப் பெரும் போராட்டம் நடத்தி வந்தது. இந்தப் போராட்டத்திற்கான திட்டங்கள் வகுப்பதும், சவால்கள் விடுவதும், கொள்கைகள் நிறுவுவதும், மக்களுக்கு ஊக்கம் கொடுப்பதுமே இந்த மாபெரும் சம்மேளனங்களின நடவடிக்கைகளாயிருந்தன. அந்தக் காலத்திலெல்லாம் யார் தலைமை வகிக்கிறார், என்ன தீர்மானம் நிறைவேறப்போகிறது, யார் யார் பேசுவார்கள் என்று மக்கள் துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள். மகாத்மாவின் பிரசன்னம் ஏராளமான மக்களைக் கவர்ந்து இழுத்தது இந்த காங்கிரஸ் திருவிழாக்களுக்கு. மகாத்மாவின் பொன்மொழிகளைக்கேட்டு ஏக்கம் நிறைந்த உள்ளங்கள் ஆறுதல் பெற்றுத் திரும்பும்; வீரம் வேண்டுவோர் அஹிம்சைக் கல்லில் சாணைபிடித்த உள்வலி பெற்றுச் செல்வர்.

மகாத்மா காந்தியடிகள் இன்று நம்மிடையே இல்லை. அவர் அமரராகிவிட்டார். மேலும் காங்கிரஸ் இன்று அரசாங்க அரியணை மீது அமர்ந்திருக்கிறது. கட்சிக்குத் தனியான பொலிவு இல்லை. அதிகார பீடத்தின் விஸ்தாரத்தில் கட்சியின் வலிவு மங்கிப்போயிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நடக்கவிருக்கும் 55-வது காங்கிரஸ் விழா பழைய தேசியத் திருவிழாக்களைப்போல் அவ்வளவு மகத்துவம் பெறமுடியாவிட்டாலும், பல நிர்மாண வேலைகளுக்குத்திட்டம் வகுக்கும் கடமையிருப்பதால் முக்கியத்துவம் பெறலாம்.

ஃ ஃ ஃ

பழைய காங்கிரஸ் சரிதையில் நம் நினைவில் நிலைத்து ஊன்றிப் போயிருக்கும் இரு திருவிழாக்கள் திரிபுரி காங்கிரசும், ராம்கார் காங்கிரசுமாகும். திரிபுரி காங்கிரசில் வீரர் சுபாஷ் போஸின் மாண்பு பதிந்து நின்றிருக்கிறது.

இத்திருவிழா வரிசையை உற்று நோக்குங்கால் இவை நடந்திருக்கும் ஸ்தலங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றன. யந்திர நடமாட்டத்தைக் கடந்த சாந்தமான இடத்திலே, பெரிய விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பிலே, அழகும் ஒளியும் ஒருங்கே குலுங்கும் பொலிவுடன் விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வரப்போகிற காங்கிரஸ் விழாவுக்கு ஜெயபுரியில் மோதி துங்கிரி குன்றுகளின் அடிவாரத்தில் பரந்து கிடக்கும் மணற்பரப்பின்மேல் 'காந்தி நகரம்' மறைந்த அண்ணலின் சாந்தமும், அறவொளியும்கொண்டு எழுந்து நிற்கிறது. குவிந்த குன்றுகளும், மலர்ந்த மணற்பாங்குமாகத் திகழும் இப்புண்ணிய தலத்திலே எழுந்திருக்கும் இச்சிறு நகரம் ஒழுங்கான நிர்வாக ஏற்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதாகச் சேதிகள் கூறுகின்றன.

காடுவெட்டி, நிலம் திருத்தி, புதர்கள் அகற்றிப் பொன்னகரமாக்கியிருக்கின்றனர் காங்கிரஸ் தொண்டர்கள் காந்தி நகரை. இந்தப்புனித வேலையில் சிந்து மாகாண அகதிகளும்,ஜெயபுரியையடுத்து வசிக்கும் ஊழியரும் தான் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். இரண்டே மாதகாலத்தில் காடகன்று காந்தி நகரம் எழுந்திருக்கிறது.

ஜெயபுரி நகரத்தினின்று ஒரு மைல் தூரத்திலிருக்கிறது காந்தி நகரம். சுற்றுப்புறங்களில் காட்சிக்குரிய ரம்மியமான இடங்களும், சரித்திரப் பிரசித்தியுள்ள ஸ்தலங்களும் நிறைந்திருக்கின்றன. ஜெயபுரி கண்காட்சி சாலையும், ராம்நிவாஸ் தோட்டங்களும் கண்ணையும், கருத்தையும் கவர்வன.

காந்திநகரின் கீழ் புறத்தே ஒரு குன்றுத் தொடர் படர்ந்திருக்கிறது. இத்தொடரின் சார்பில் 'கால்தஜீ' என்ற புண்ணிய ஸ்தலம் இருக்கிறது. குன்றினின்று ஊறி வழியும் ஜலத்தைத் தேக்கி நிற்கும் இனிய குளமொன்றுண்டு கால்தஜியில். இந்தக் குளத்துக்குத் தனிப் பெருமையுண்டு. பண்டைக் காலத்தில் பாண்டவர் ஐவரும் துர்யோதனனால் கால் விலங்கிடப்பட்டு இங்கு சேர்ந்து இக்குளத்தில் கால்களை நனைத்து விலங்குகள் முறியப் பெற்றதாக பழங்கதையொன்று கூறுகிறது.

ஃ ஃ ஃ

ஜெயபுரி காங்கிரஸ் பழைய காங்கிரஸ்களைப் போல் போர் முரசு கொட்டக்கூடப் போவதில்லை- ஆட்சித் திட்டங்களையும், நிர்வாகக் கொள்கைகளையும் நேர்பட ஆராய்வதற்குக் கூடுகிறது. எனவே நிதானமும், அறிவுத் தெளிவும், அகங்காரமின்மையும் நிறையத் தேவை.

தலைமை வகிக்கப் போகும் டாக்டர் பட்டாபி அரசாங்கத்துக்கும் கட்சிக்கும் இடையே தீவிரமான ஒத்துழைப்பை வற்புறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒத்துழைப்பு கவனமற்ற ஒன்றுதாலகிவிடக் கூடாது என்று நாட்டின் நன்மையில் கருத்துள்ளோர் கவலைப் படுகின்றனர்.

அரியணை அமர்ந்திருப்பதும் காங்கிரஸ்தான் ஆயினும் வெளியிலிருக்கும் கட்சி தன் பங்கை அக்கரையுடன் நிறைவேற்றி, அரசாங்கத்துக்குத் தக்க யோசனைகள் கூறி, திட்டங்களுக்குத் திருத்தங்கள்செய்து தன் ஸ்தானத்தைத் தனிப்பட வகுத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

டாக்டர் பட்டாபியின் தலைமையில் கட்சிப் பீடம் தனக்குத் தனிவலிவு உண்டாக்கிக்கொள்ளும் என்று நம்ப இடமிருக்கிறது. பட்டாபி முற்போக்குப் பாதையை வலியத் தொடரவில்லை யென்று பலர் குறை கூறினும், காலவேகத்தின் இன்றியமையாத மாற்றங்களுக்குத் தக்கபடி திருத்திக்கொள்ளத் தவறிவிடுவார் என்று கூற இடமில்லை.

ஜெயபுரி விழா காங்கிரஸ் அரசியலில் ஒரு முக்கியமான திருப்ப காலத்தைச் சுட்டிக் காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

ராஜன் பாபு கட்சியை சாரத்தியம் செய்யும் பொறுப்பினின்றும், அரசாங்கத்தில் பதவி வகிக்கும் பொறுப்பினின்றும் இன்று விடுபட்டு நிற்பதற்கு இன்றைய காங்கிரஸ் அரசியல் ஒரு காரணமோ என்ற சந்தேகத்தை ஜெயபுரி நிவர்த்தித்தாலும் நிவர்த்திக்காலம்.

திருச்சி ஸ்டார் டாக்கீஸ்
இன்னுமா பார்க்கவில்லை?
இன்றே பாருங்கள். நிகரற்ற ஆதரவுடன்
13-12-48 முதல் 7-வது வாரமாக நடைபெறும்
ஜூபிடர் மோகினி தமிழ் படம்
V. N. ஜானகி, மாதுரிதேவி, T. S. பாலையா, புளிமூட்டை,
லலிதா, பத்மினி நடித்தது
தினசரி 2-காக்ஷிகள் மாலை 6, இரவு 10-மணிக்கு
சனி, ஞாயிறுமட்டும் மாட்னி பகல் 2-மணிக்கு

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

அனுபவம் கண்ட முடிவுகள்

"அன்னக் கொடி கட்டி அடியவருக்குத் தேடி அமுதளித்த பெரியவர்கள் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள். ஆராய்ச்சி மணி கட்டி அரசாண்ட மனுநீதிச் சோழனும் தமிழ் நாட்டு மன்னன் தான். இந்தக் காலத்தில் கூடப் பெருஞ் செல்வர்கள் சத்திரம் சாவடிகள், கோயில் குளங்கள், கல்விச்சாலைகள், யுத்த நிதிகள் இப்படித் தான தருமம் செய்துகொண்டுதானே இருக்கிறார்கள்! நீங்கள் மட்டும் ஒரு டம்ளர் தண்ணீர்கூடத் தரமாட்டேன் என்று விளம்பரம் போட வேண்டிய அவசியம் என்ன? இது நம்ம நாட்டின் பண்புக்கு ஏற்றதாக இல்லையே" என்று விளம்பரப் பலகை விஷயமாக வினவினேன்.

நாயுடு சிரித்துக்கொண்டே, "இந்தப் போர்டைப் பார்த்தால் மிகவும் கொடுமையாகத் தோன்றுகிறதல்லவா?" என்று கேட்டார். "கொடுமை மட்டுமல்ல. மகா கருமித்தனமாகக் கூட இருக்கிறது. இப்படிச் சொல்வதற்கு மன்னிக்கவேண்டும்" என்றேன் நான்.

"உண்மைதான். உங்களுக்கு அப்படித் தோன்றுவதைப்பற்றி அக்கரையில்லை. ஆயினும் நீங்கள் சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்துகொண்டால் பிறகு எப்படி வேண்டுமானாலும் அபிப்ராயம் கொள்ளலாம்" என்றார் நாயுடு.

"அதைத்தான் சொல்லுங்களேன்" என்று நிமிர்ந்து உட்கார்ந்தோம், அவர் சொல்வதைக் கேட்கத் தயாராக. அவருடன் பேசி நாங்கள் அறிந்த விபரங்களைத் தன்மை ஒருமையிலேயே இங்கு தருகிறேன்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் என்னை நாடி வருவோருக்கும் என் கவனத்தில் படுவோருக்கும் பொருளோ, கல்வியோ, தொழில் அறிவோ அவரவர் தேவையையும் தகுதியையும் அறிந்து இயன்றவரையில் உதவி புரிந்து வந்ததுண்டு. எப்போதுமே எனக்கு விளம்பரப் புகழ்ச்சியில் விருப்பம் இல்லையென்பதுடன் வெறுப்பும் உண்டு. மேடைகளிலோ, பத்திரிகைகளிலோ பெயர் அடிபடாமல் இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால் எப்படியோ என்னை மக்கள், மோட்டார் மன்னனென்றும், கொடையாளி யென்றும், விஞ்ஞானி யென்றும், தொழில் நிபுணனென்றும் விருது கூறிப் புகழ ஆரம்பித்துவிட்டார்கள். இந்தப் புகழ்ச்சிக்குக் காரணம் தற்செயலாகவும் இருக்கலாம், என்னுடைய எச்சரிக்கைக் குறைவாகவும் இருக்கலாம். எப்படியோ பல இடங்களிலும் என் பெயர் அடிபட இடம் கொடுத்தது தவறாக முடிந்தது. திடீரென்று நூற்றுக்கணக்கான கடிதங்கள் ஒவ்வொரு நாளும் வர ஆரம்பித்தன. உடைத்துப் பார்த்தால் ஏதாவது ஒரு தருமம், யாசகம், நன்கொடை இப்படிக் கோரிக்கைகளாகத்தான் இருக்கும்.

"ஆரம்பத்தில் நான் வழக்கம் போல இவற்றை இயன்ற அளவு நிறைவேற்றியே வந்தேன். ஆயினும் தகுதியற்றவர்களும், சோம்பேறிகளும் பயன் அடைந்து விடுகிறார்களென்பதை விரைவில் நான் புரிந்துகொண்டுவிட்டேன். பிறகுதான் நீங்கள் படித்த விளம்பரத்தை — ஆழ்ந்து யோசித்த பிறகு — வாசலில் மாட்டி வைத்தேன். யாருக்கும் எதுவும் கொடுப்பதில்லையென்றும் முடிவு செய்தேன். இந்த விளம்பரம் போட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் கூட கடிதங்கள் வருவது அதிகரித்திருக்கிறதேயன்றிக் குறையவில்லை.

"என்ன இருந்தாலும்........" என்று பேச முயன்றேன். அதற்குள் நாயுடு "அவசரப்படாதீர்கள். பணம் கிடக்கட்டும். கருமித்தனத்திற்கு ஏதோ சமாதானம் என்று நீங்கள் கருதலாம். கல்வி விஷயத்திலும் கூட இப்படித்தான். நிதானமாகக் கேட்டுவிட்டுப் பிறகு சிந்தனை செய்யுங்கள்" என்றார் நாயுடு. மௌனமாகக் கேட்டிருந்தோம். அவர் மேலும் கூறினார்.

"சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் பலவருடங்களைப் பாழாக்கி மிகக் குறைந்த பயிற்சியும் கல்வியுமே நமது குழந்தைகளுக்குக் கிடைத்து வருகிறது. கல்வி முறையில் உள்ள கால நஷ்டம், பொருள் விரயம் எனக்கு வருத்தமாக இருந்து வருகிறது. என் வாழ்க்கையின் அனுபவத்தில் நான் அறிந்த பல அரிய உண்மைகளை — தொழில் அறிவை, கல்வியை—மிக மிகக் குறைந்த காலத்தில் மிக அதிகமான நபர்களுக்குக் கற்பிக்க விரும்பினேன். அதன்படி செய்தும் வந்தேன். நான் மேலே கூறியபடி என் பெயர் வெளிப்பட ஆரம்பித்த பிறகு இந்தத் துறையில் கூட என் லட்சியம் வீணாகத்தான் ஆகிறது. அடக்கமாகவும் அமைதியாகவும் நான் தந்த கல்விப் பயிற்சி இந்த விளம்பரத்தினால் கெட்டுவிட்டது. முன்பு செய்து வந்ததுபோல் இப்போது என் திறமையை—கல்வியை— அதிகமான பேருக்கு அவ்வளவு குறுகிய நேரத்திலும் செலவிலும் கிடைக்கும்படி செய்ய முடியவில்லை.

"செல்வமும் கல்வியும் பிறருக்கு உதவுவது விளம்பரத்தினால் பயன் குறைந்தும் தடைப்பட்டும் போகிறது என்பதைச் சொன்னேன், இவற்றை நான் முன்பு சம்பாதித்த வேகத்திற்கும்—விளம்பரத்திற்குப் பின்னால் இவற்றை நான் சம்பாதிக்கும் அளவிற்கும் கூட மேலே சொன்ன வித்யாசம் இருக்கத்தான் செய்கிறது. அதாவது கொடுக்கல் வாங்கல் இரண்டு வழியிலும் இந்த விளம்பரம் ஒரு பெரிய தடையாக வந்து குறுக்கே நிற்கிறது."......

"என்ன இருந்தாலும் உங்கள் இந்த நன்கொடை மறுப்புத் தீர்மானத்தினால், தகுதி வாய்ந்தவர்களும் உதவி இன்றியமையாத தீனர்களும் உங்கள் உதவியைப் பெற வழியில்லாமல் போய்விடுகிறதல்லவா? தகுதியற்றவர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் உங்கள் உதவி உபயோகப் பட்டுவிடுகிறதென்ற கோபத்தினால் துன்பத்தில் நொந்துகிடக்கும் பலர் உங்கள் வாசலுக்குள் நுழையவே இடமில்லாமல் கதவை அடைத்து விட வேண்டுமா?" என்று கேட்டோம்.

"உண்மைதான். தகுதியுள்ளோரை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை நான் இழந்துவிடத்தான் செய்கிறேன். அவர்களை அறிந்தால் ஏதேனும் உதவியிருக்கக் கூடும். ஆயினும் 75 சத விகிதம் தவறுகளிலிருந்து நான் இப்போது தப்பித்துக்கொள்ள முடிகிறது. ஓரளவுக்கு இது சுயநலத்தின் பாற்படுமென்பதை நான் மறுக்கவில்லை. இன்றைய நம்முடைய சமுதாய நிலையில் இதைத்தவிர எனக்கு வேறு வழி இல்லாமல் இருக்கிறது. இப்போதெல்லாம் எனக்கு வரும் கடிதங்களை அந்தக் கடிதம் வந்த பத்தாவது நாள் தான் திறந்து பார்ப்பது என்று வைத்திருக்கிறேன். பார்க்க விரும்பிப் பேட்டி கேட்பவர்களுக்குக்கூட அவர்கள் கேட்டதற்கு இரண்டு வாரம் தள்ளி நாள் குறித்துக் கூட விடை அளிப்பதுண்டு. இருள் சூழ்ந்த — நன்றியோ தகுதியோ அற்ற—சூழ்நிலையில் நான் திட்டமிட்டுச் செல்லும் பாதை ரஸிக்கத் தக்கதாக இருக்காதுதான். ஆயினும் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. இன்னும் என் வாழ்வின் உழைப்பு—நான் அறிந்த கல்வி- இவை நான் விதைத்த உள்ளங்களில் வேரூன்றி முளைவிட்டெழுவதைக் கண்டு மகிழவே நான் விரும்பியிருக்கிறேன்.

"இந்த விளம்பரத்திற்குப் பிறகும் நான் கொடுப்பதை முற்றிலும் நிறுத்திவிட முடிந்ததா வென்றால், இல்லையென்றே சொல்ல வேண்டும். சற்று முன்பு நீங்கள் தமாஷ் செய்ததுபோல ஒரு டம்ளர் தண்ணீர் கூடக் கிடைக்காதென்ற போர்டு உங்கள் விஷயத்தில் ரத்து செய்யப்பட்டதுபோல என்று வைத்துக்கொள்ளுங்கள். இணங்கித் தீரவேண்டிய—இன்றியமையாத—தகுதிவாய்ந்த பாத்திரங்களுக்கு சந்தர்ப்பம் போல் ஏதேனும் இயன்ற உதவியை நான் அறவே மறுத்துவிடவும் இல்லை. விளம்பரத்தால் ஏற்பட்ட சங்கடத்திற்கும் சோதனைக்கும் ஒரு கவசம் அந்த விளம்பரப் பலகை"

"வாழ்க்கையின் நீண்ட அனுபவத்தின் விளைவு அந்த விளம்பரப் பலகை. நான் அறிந்த வரையில் உலகில் எவனுடைய திறமையும் அறிவும் செல்வ நிலையும் பலபேர் அறியும்படியான விளம்பரத்தைப் பெறுவது விபரீதமாகவே முடிகிறது.

"யாரும் அறியாமல் வெளிச் சத்தமின்றி, ஒருவன் நிறையக் கல்வியோ, செல்வமோ சேர்த்தால் அனைவருக்கும் உபயோகமான ஒரு லட்சிய வாழ்க்கை வாழ வசதி ஏற்படுகிறது. ஆனால் அந்தத் திறமை அல்லது செல்வம் பிறர் அறியும்படி பெருவாரியாக விளம்பரப் படுத்தப் பட்டால் அத்துடன் வளர்ச்சி தேக்கமடைந்து போகிறது. நமக்கோ மற்றவருக்கோ அதனால் ஒரு பயனுமில்லை.

"நமக்கு என்ன திறமையுண்டு என்பதை மேடைகளிலோ பத்திரிகைகளிலோ, வாய்ப் பேச்சிலோ தம்பட்டமடித்துக் கொள்வது நமக்கே இடையூறாக முடிகிறது. யாருக்கும் நம்மால் உதவவும் முடிவதில்லை. எனவே நம்மை அடக்கமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஆயினும் அதே சமயத்தில் நாம் அறிந்திருக்கும் பொருளின் மேன்மையை மற்றவரும் உணர்ந்து கொள்ளும்படி அடக்கமாகச் செயல் புரியத் தவறவும்கூடாது.

"நமக்கு எவ்வளவு செல்வமுண்டு என்பதைப் பிறர் அறியும்படி தடபுடல் செய்யக் கூடாது. அதே சமயத்தில் யாதொரு விளம்பரமும் இல்லாமல் முடிந்தவரையில் தக்க பாத்திரமறிந்து பலருக்கும் நம்முடைய செல்வம் பயன்படும்படிச் செயல்புரியவும் வேண்டும்". இப்படிச் சில முடிவுகளை அவர் தெரிவித்தார்.

புத்தக விமரிசனம்

வீட்டுக்கு ஒரு ஆஸ்பத்திரி

[ஹோமியோபதிக் வைத்திய புஸ்தகம், முதல் பாகம். இயற்றியவர் டாக்டர் எஸ். வீ. ராஜையா, எம். டி., (ஹோமியோ) பிரசுரம் ஹோமியோபதிக் சம்ரக்ஷண நிலயம், மதுரை. விலை ரூபாய் மூன்று]

தமிழில் விஞ்ஞானம், மருத்துவம் சம்மந்தமான நல்ல புத்தகங்கள் வெளி வரவேண்டுமென்று இருக்கும் இன்றைய ஆவலுக்கு உகப்பான முறையில் வெளிவர ஆரம்பித்திருக்கும் ஒரு சில நல்ல பிரசுரங்களில் இதுவும் ஒன்று.

இப்புத்தகத்தில் நவீனகால ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தையான சாமுவேல் ஹானிமன் என்ற ஜெர்மானியரின் சரித்திரமும், ஆற்றலும் விளக்கப் பட்டிருப்பதுடன் எளிய முறையில் ஹோமியோபதியின் அடிப்படைகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. விரிவான நடைமுறை மருத்துவக் கோட்பாடுகளும், விவரங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஹோமியோபதியின் தத்துவம் நமது பண்டைய இலக்கியங்களில் அநேக இடங்களில் காணக் கிடைக்கிறது. ஹானிமனின் தோற்றம் நவீன கால மருத்துவ முறைகளிலுள்ள பயங்கரமான குறைகளை வெளிப் படுத்தி, அக்கரையான ஒரு முறையை வகுத்துக் கொடுத்திருக்கிறது என்று கூறலாம்.

"தேகாரோக்கியம் உள்ளவர்களுக்கு அதிகமாக உட்கொள்ளுவதால் ஒரு வியாதியை உண்டாக்கும் மருந்து, அதே வியாதியுள்ளவர்களுக்குச் சிறிய அளவாகக் கொடுக்கப்படும் போது அவ்வியாதியை நீக்கும்" என்பதே ஹோமியோபதியின் அடிப்படைத் தத்துவம்.

மருத்துவம் ஏனைய எல்லா வாழ்க்கைத்துறைகளைப் போலவே நாளுக்கு நாள் வளரும் இயல்புடையதாக இருக்கிறது. நேற்றைய முடிவுகள் இன்றைக்குத் தகர்க்கப்படுவது சகஜமாயிருப்பதால் ஜாக்கிரதையான பரிசீலனைகளும், நடைமுறையும் அமுலுக்கு வரவேண்டுமென்பதை ஹோமியோபதி வற்புறுத்திக் காட்டியிருக்கிறது. மருத்துவத் துறை முன்னேற்றங்கள் விரைவில் பரவ முடியாதிருப்பதன் காரணம் அது வியாபாரமாயிருப்பதும், பெரும்பாலான மருத்துவர்களது அறிவுக்கு விரைவில் எட்ட முடியாமலிருப்பதும் தான்.

ஹோமியோபதி நவீன முறையில் முதன் முதலில் தோன்றிய காலத்தில் அதற்கு ஐரோப்பா முழுவதும் பலத்த எதிர்ப்பு இருந்த போதிலும் ஆர்ன் என்பவர் வகுத்த நியதி, மெச்னிகாப், ஸர் ப்ளும்பீல்டு பானிங்டன், ஸர் ஆல்ம்ராத் ரைட் போன்ற அறிஞர்களது பரிசீலனைகளின் பிறகும், அவர்களது வற்புறுத்தலின் கீழும் ஹோமியோபதி தத்துவத்தின் நியாயம் ஒப்புக் கொள்ளப் பட்டது.

விமரிசனத்திலிருக்கும் இப்புத்தகத்தில் ஹோமியோபதி தத்துவத்திற்குப் பழையசான்றுகளுடன் கூடிய விரிவான சரித்திர விளக்கமும், ஏனைய முறைகளின் குறைகளும் தரப்பட்டால் நன்றாயிருக்குமென்று நினைக்கிறோம். ஏராளமான அச்சுப்பிழைகளும், புத்தகத் தயாரிப்பில் அழகின்மையும், சாதாரண மனிதனுக்கு சுலபத்தில் கொடுக்க முடியாத விலையும் இப்புக்தகத்தின் குறைகள். இவற்றைச் சீர்திருத்த முயற்சி செய்வார்களென நினைக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில் பர்னார்டு ஷா எழுதிய 'டாக்டர்ஸ் டிலம்மா' என்ற நாடகத்தின் முன்னுரையில் மருத்துவத் துறை பற்றிய விரிவான ஆராய்ச்சி இருப்பதை ஞாபகப் படுத்துகிறோம்.

ஹிந்துஸ்தான் (ராஜாஜி மலர்)

சென்னையிலிருந்து வெளியாகும் 'ஹிந்துஸ்தான்' வாரப்பதிப்பின் டிசம்பர் 5-ம் தேதி இதழ் ராஜாஜி விசேஷ மலராகப் பொலிவுடன் திகழ்கிறது. பலத்த சர்ச்சைகளும், விவகாரமும் நடந்து வந்த காலத்திலும் கூட 'ஹிந்துஸ்தான்' அவரது அடிச்சுவட்டில் வழுவாது நின்று கொள்கைப் பற்றுடன் தொண்டாற்றி வந்திருப்பது. இந்த முறையில் தமிழ்ப் பத்திரிகையுலகில் ராஜாஜியின் அரசியல் கொள்கைகள், ஆதரிசம் இவற்றைப் பற்றிய சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கும் 'ஹிந்துஸ்தான்' தனக்கென்று தனியொரு ஸ்தானம் பற்றியிருக்கிறது.

இந்த மலரில் ராஜாஜியின் வாழ்க்கை, அரசியல் இவை பற்றிய அறிவாற்றல் மிகுந்தபல கட்டுரைகள் பொலிவுறுகின்றன. நிறையப் புகைப் படங்களும் குறிப்புகளும் ஆங்காங்கு அணிசெய்கின்றன.

'ஹிந்துஸ்தான்' இம்மலரை வெளிக் கொணர்ந்ததன் மூலம் நல்ல வெற்றி கண்டிருக்கிறது.

பிழை திருத்தம்

சென்ற வார 'சிவாஜி'யில் வெளியான குட்வின் அண் கோ. பரிசுப் போட்டி விளம்பரத்தில் 'மாதிரி விடை' என்றிருப்பதை 'கீ விடை' என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

—மானேஜர்.

நாட்டியக்காரி:

(ஆசிரியர் அருணன். தமிழன் நிலயம், மதுரை, விலை அணா 8)

திரு. கா. மு. ஷெரீப் அவர்களது முன்னுரையுடன் பாகதிரங்களே தத்தம் கதையைச் செல்லிக் கொண்டு போகும் காதல் கதையாக அமைந்துள்ளது.

ராமசாமிப் பெரியார்.

(பேராசிரியர் வ.ரா எழுதியது தமிழ்ப்பண்ணை வெளியீடு, தியாகராய நகர், சென்னை. விலை அணா 6)

ராமசாமிப் பெரியாரவர்களது வாழ்க்கையைத் தமக்கே உரித்தான ரஸமான நடையில் விமரிசனம் செய்திருக்கிறார் பேராசிரியர் வ. ரா. பெரியாரைப் பற்றித் தெரியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தி வைக்கும் சிறு நூல் இது என்று சொல்லலாம்.

கவிஞர் களஞ்சியம் :

(தொகுத்தவர் முல்லை-முத்தையா, தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை, விலை அணா 12)

நாமக்கல் கவிஞரின் நூல்களினின்றும் கடிதங்களினின்றும் பொறுக்கி எடுத்துக் கோர்த்த 'எண்ணக் குவியல்கள்' இச்சிறு நூலில் இடம் பெற்றிருக்கின்றன. தமிழ்ப் பிரசுரத் துறையில் இது ஒரு புது முயற்சி என்ற முறையில் வரவேற்கத்தக்கது. வாழ்க்கை சம்மந்தமான பலவித பிரச்னைகள் பற்றியும் நாமக்கல் கவிஞரது கருத்துகள் அடங்கியுள்ளன.

சிவாஜியின்

சொந்த அச்சுக்கூடம்

உங்களுக்கு வேண்டிய
சகலவிதமான அச்சு
வேலைகளும் அழகாகவும்
குறித்த நேரத்திலும்
செய்து கொடுக்கிறோம்.

சிவாஜி அச்சுக்கூடம்

3, சின்னக்கடைத் தெரு

தெப்பக்குளம் P. O. திருச்சி.

திருச்சி டி. மு. கோர்ட்டு

S. C. 511/36 E. P. 25/48.

காதர் மொய்தீன் சாயபு—வாதி

ஷேக் சுல்தான் சாயபு—2ம் பிரதிவாதி

வாதி ஷெ பிரதிவாதி வசமுள்ள ஷேக் வலியுலலா சாயபுக்கு சொந்தமான சொத்துக்களை எலம்போட எலதேதி நிஷ்கரிஷை செய்ய 22—12—48 தேதிக்கு வாய்தா போடப்பட்டிருக்கிற விபரம் இதனால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை உள்ளவர்கள் ஷெ தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

(Sd) M. முத்துசாமி,

அட்வகேட்.

சூதகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவாரணமளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd., MADRAS.

REGD. INSIST ON Original Wheel Mark Diamonds REGD.
BIG BAZAAR — TRICHINOPOLY.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 12—12—48

அரிசி விஷயம்

நமது மாகாணத்தில் முன்பு ரேஷன் அமுலிலிருந்த காலத்திலும், பின்னர் ரேஷன் எடுக்கப்பட்டு இன்று வரையிலும் ரேஷன், கஷ்ட நிவாரணக் கடைகளின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் அரிசி, மற்ற உணவுப் பொருள்கள் நாற்றமெடுத்தும், கல் மண் கலந்தும் இருந்திருக்கின்றன என்பதை நாம் பன்முறை எடுத்துக்காட்டிக் குறிப்பான உதாரணமும் கொடுத்து வந்திருக்கிறோம். இந்த நிலைமையின் காரணம் மில் காரர்களின் அக்கரையின்மையும், உணவுப் பொருள்கள் சரியான பாதுகாப்புடன் சேமித்து வைக்கப்படாமையும் ஆகும். இதன் காரணமாகக் கெட்டுப்போன உணவுப் பொருள்கள் கட்டாயமாக (பண நஷ்டத்தைக் கருத்தில் கொண்டு) விநியோகிக்கப்படுவதுடன், ஏராளமாக வீணடிக்கப்பட்டும் போகின்றன.

சமீபத்தில் மதுரை வைத்தியநாதய்யரவர்கள் டாக்டர் ராஜனுக்கு எழுதிய கடிதத்தில் அரிசியில் செங்கற்றூளும், மண்ணும் கலக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதை எடுத்துக் காட்டிய தன் பேரில் அரசாங்கத்திற்கு விழிப்பும், கவலையும் பிறந்திருப்பதை வரவேற்கிறோம்.

பத்திரிகைக்காரர் முன்னிலையில் டாக்டர் ராஜன் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டு, மில்காரர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருப்பதுடன், அவர்கள் தவருக நடந்து கொண்டால் லைசென்சுகள் நீக்கப்படும் என்றும் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள் பாதுகாப்பு விஷயத்திலும் அரசாங்கம் இத்தகைய கவனம் செலுத்த வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறோம்.

ஜெனரல் கரியப்பா

இந்திய ராணுவத்திற்கு பிரதம சேனதிபதியாக இந்தியரே நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும். லெப்டினன்ட் ஜெனரல் கரியப்பா இந்த கௌரவத்தை அடைந்திருக்கிறர். இதுகாறும் புச்சர் என்ற ஆங்கிலேயர் இப்பதவியை வகித்துவந்தார். இந்த நியமனம் வருகிற ஜனவரியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

குடகு மர்காராவில் பிறந்த கரியப்பாவுக்கு இப்போது நாற்பத்தெட்டு வயதாகிறது. ராணுவ சம்பந்தமான பல இலாகாக்களிலும் தேர்ச்சிபெற்று மிக அதிகமான காலத்துக்கு சேவை செய்துள்ள அதிகாரி கரியப்பா. மத்திய கிழக்கிலும், தூரக்கிழக்கிலும் இந்தியப் படையில் நீண்டகால சேவை செய்தும், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ராணுவ ஆலோசனைகளுக்காகச் சென்று திரும்பியும் தேர்ச்சி பெற்றவர். இந்திய ராணுவச் சீரமைப்பில் கரியப்பாவின் பங்கு முக்கியமானது. ஜப்பான் உள்பட அகில உலகத்திலும் யாத்திரை செய்து ஆழ்ந்த அனுபவம் பெற்றுள்ள கரியப்பாவின் சேனதிபத்தியத்தின் கீழ் இந்திய ராணுவம் புதுப் பொலிவும், வன்மையும் பெறுமென்று நம்புகிறோம்.

ஹைதராபாத்

ஹைதராபாத்தில் புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான பூர்வாங்க திட்டங்கள் ஆலோசனையிலிருந்துவரும் சமயத்தில் சமஸ்தான காங்கிரசில் விரும்பத்தகாத பிளவும், பூசலும் ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் ராமானந்த தீர்த்தர் தலைமையில் கூடிய சமஸ்தான காங்கிரஸ் சம்மேளனத்தின் போது பல அங்கத்தினர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதால் நேர்ந்த கசப்பே இதன் காரணம் என்று தெரிய வருகிறது.

இதுகாறும் ஹைதராபாத் மக்களுக்கு வெறியர் ஆட்சியினின்று விடுதலை வாங்கித் தருவதற்காக நடந்த போராட்டத்தினபோது ஐக்கியம் நிலவியது. ஆனல் ஆட்சியமைப்புச் சமயம் நெருங்கும்போது பிளவுகள் தோன்றுகின்றன.

மக்களுக்கு சமஸ்தான காங்கிரசிடம் அவநம்பிக்கை ஏற்பட இப்பிளவு விதை ஊன்றுமோ என்று அஞ்சுகிறோம். இந்தப் பிளவின் அடிப்படையில் பதவிப் போராட்டம் மறைந்திருக்கிறது என்று யாராவது ஊகித்தால் அதை மறுக்க முடியாத நிலைமையிலிருக்கிறது.

ஸ்வாமி ராமானந்த தீர்த்தரும், ஏனைய காங்கிரஸ்காரர்களும் இப்பிளவை உடனே அகற்ற வழி செய்யவேண்டும்.

✱

சிறு குறிப்புகள்

சரத்போஸின் 'யூனே'

நேதாஜியின் சகோதரரும் பிரபல வங்காளியுமான சரத் சந்திரபோஸ் தற்போது ஐரோப்பாவில் உடல் நிலையை சீர்திருத்திக் கொண்டு, உலக அரசியலையும் சீர்திருத்தத் திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறர்.

சரத்போஸ் காங்கிரசிலிருந்து விலகியதும், இந்திய சோஷியலிஸ்டு குடியரசுக் கட்சியை ஸ்தாபித்ததும் நேயர்களுக்கு நினைவிருக்கும். தற்போது ஐ. நா அல்லது 'யூனே' சபை என்று கூறப்படும் சர்வதேச சபை தன் லட்சியங்களை நிறைவேற்றச் சிறிதும் சக்தியற்றுக் குழப்பத்திலும், அதிகார வெறியிலும் தத்தளித்து வருவது போஸின் சிந்தனையை உறுத்தியிருக்கிறது.

தென் ஆசிய நாடுகள் தமக்கென்று தனியாக ஒரு 'யூனே' அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சரத் போஸ் கருதுகிறர். இந்த சபையில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பர்மா, இலங்கை இவைதான் அங்கம் வகிக்கும்.

பிரிட்டிஷ் — இந்திய உறவு விஷயமாகவும் சரத் போஸ் தம் கருத்தைத் தெரிவித்திருக்கிறர். பிரிட்டன் இந்தியாவுக்குத் தரவேண்டிய போர்க்கடன் எட்டு கோடி பவுனையும் வசூல் செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து. இதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள இந்தியர் தயங்கக் கூடாது என்பது போசின் எண்ணம்.

ராஜாஜி ஜாதகம்

ராஜாஜிக்கு இவ்வாண்டோடு அறுபத்தொன்பது வயது பூர்த்தியாகிறது. சமீபத்தில் ஒரு பத்திரிகை நிருபருக்கு அவர் அளித்த பேட்டியின்போது தமது பிறந்ததினத்தைப்பற்றி பொம்ப ரஸமாகச் சில தகவல்கள் கூறியிருக்கிறர். அவர் கூறியதாவது:—

"வருஷத்தில் ஏதாவது ஒரு நாளில்நான் பிறந்திருக்க வேண்டும். எனவே 1948-லும் எனக்கு ஒரு பிறந்த நாள் இருந்துதானே யாகவேண்டும்! என் தந்தைக்கு ஜாதக விஷயத்தில் ரொம்பத் தேர்ச்சியுண்டு. ஆனல் அவர் என் ஜாதகத்தைத் தொலைத்து விட்டார். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் என் திருமண விஷயமாக ஜாதகம் தேடப்பட்டபோது அது அகப்படவில்லை. கடைசியில் அத்தைகளிடமும், மாமாக்களிடமும் சென்று விசாரித்து ஒன்றுக்கு ஒன்று பொருந்தாத பல புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. எனவே எங்களூர்ப்பக்கத்துக் குடியானவர்களைப் போலவே எனக்கும் என் பிறந்த நாள் தெரியாது! சென்னை நண்பர்களை என் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாமென்று நான் கூறியதற்கு இதுவும் ஒரு காரணம். எனக்கு இன்று வந்திருக்கும் வாழ்த்துகளைப் பார்க்கும்போது இன்றே என் பிறந்த நாளாக இருப்பதுபோல் நினைக்கிறேன். பிறவியே அற்புதமான விஷயங்களில் ஒன்ருகக் குழந்தைகள் விஷயத்தில்தான் பொருந்துகிறது. எனவே குழந்தைகளின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதுடன் நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும்."

சீனவில்

சீனவில் நடக்கும் கோர யுத்தத்தின் போக்கு தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான மாறுதல்களை உண்டாக்குமென்று சூசகங்கள் கூறுகின்றன. சயாமிலும், இந்தோனேஷியாவிலும் இது வெளிப்படையாகத் தெரிகிறது. பர்மாவிலும், மலேயாவிலும் உள்ளடங்கியிருக்கிறது.

சியாங்கே-ஷேக்கின் அரசாங்கம் தோல்வியடைந்து சீன அரசியலே மாறிவிடும் என்ற நிச்சய நிலை உதயமாகியிருக்கிறது. அமெரிக்க உதவி சீனவுக்குக் கட்டாயம் கிடையாது என்றே சொல்லிவிடலாம். க்ரீஸ் விஷயத்திலேயே கை விரித்துவிட்ட அமெரிக்கா சீன விஷயத்தில் காலங் தாழ்த்த இந்த சமயத்தில் என்ன செய்துவிடப் போகிறது.?

இது சம்மந்தமாக ஆஸ்திரேலியப் பிரதமர் சிப்லி தம் கருத்தை தெரிவிக்கையில் "கம்யூனிஸத்தின் பரவுதலைத் தடுப்பதற்கு அடக்குமுறை வழிகள் உதவாது. சமூகநிலையை மாற்றவேண்டும்—சீரமைக்கவேண்டும்" என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறர். ஆஸ்திரேலியாவில் கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடைகிடையாது என்ற விஷயம் இங்கு குறிப்பிடத்தக்கது. பண்டித நேருவுக்கும் தம் கருத்தே இருப்பதாக சிப்லி கூறியபோதிலும் இந்திய அரசியலின் தற்போதைய வாடையில் சிப்லியின் தத்துவம்கொண்டு செலுத்தப்படுமா என்பது ஆராய வேண்டிய விஷயம்.

கலைக் களஞ்சியம்

இந்த இதழ் வெளியாகும் ஞாயிறன்று சென்னை சர்வகலாசாலைக் கட்டிடத்தில் தமிழ்க் கலைக் களஞ்சிய மாதிரிப் பிரதி பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு வழங்கி வெளியிடப்படுகிறது.

தமிழில் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் முயற்சி மகத்தானதொரு முயற்சி. பொறுமையும், விசாலமான நுண்ணறிவும் சேர்ந்து தான் இந்த மகத்தான சாதனையை சாதிக்க முடியும். தமிழில் கலைக்களஞ்சியம் முழுப் பொலிவும், பூரணத்துவமும் பெற்று வெளியாகும் நன்னளைத் தமிழ் மொழியில் அக்கரைகொண்டுள்ளோர் ஆவலுடன் எதிர்பார்க்கிருர்கள்.

In the Court of the Subordinate Judge at Tiruchirapalli.

O. P. No. 89/1948.

In the matter of the detbs of T. P. Subramanya Pillai —Deceased

Rengammal, wife of T. P. Subramania Pillai, Chinnakadai Street, Trichinnpoly aud others.—Petitioners.

Notice is hereby given that on 21—7—48 an application was made to this court by the Petitioners above for the grant to them of a certificate under Part X of the Succession Certificate Act, 1889, with respect to certain debts and securities of the late T. P. Subramania Pillai who died on 6—5—47 and that the 17th December 1948 has been fixed for the hearing thereof, when you are at liberty to appear and oppose the same.

Tiruchi 10-12-48 (Sd) R. Seshadri, Advocate for Petitioners.

கரூர் டி. மு. கோர்ட்டு

O. S. 210/48

முத்துசாமி கவுண்டர் —வாதி

சுப்புரத்ன கவுண்டர் —1-ம் பிரதி வாதி

ஷை வாதி வக்கீல் 1-ம் பிரதி வாதிக்கு இதன் மூலம் தெரிவிப்பதென்னவென்ருல் தங்கள் தகப்பஞர் 28-7-1930ல் வாதி வகையருவிடம் குடும்ப தர்மங்களை நடத்தி வருவதற்காக மொத்தம் ரூ. 2000 பெற்றுக்கொண்டார் என்றும் இப்பொழுது தர்மங்கள் சரிவர நடந்து வராததால் ஷை திகைக்கு கணக்கு கொடுக்கவும் வேறு டிரஸ்டி நியமிக்கவும் ஷை நெம்பரில் தாவா செய்யப்பட்டு 20-12-48ல் வாயிதா ஏற்பட்டிருக்கிறது. தங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபணையுண்டானல் அன்று கோர்ட்டில் ஆஜராகி தெரியப்படுத்திக்கொள்ளவும்.

R. Harihara Iyer,
Pleader for Plaintiff, Karur.

குளித்தலை டி. மு. கோர்ட்டில்

S. C. No. 464/1948.

முசிரி மாக்கடை சிதம்பரம்பிள்ளை —வாதி

மு. தா. வைத்தம் பாறை முத்துக் கிருஷ்ணஞ் செட்டியார் —பிரதி வாதி

வாதி பிரதிவாதி பேரில் மச்க்கடை பாக்கிக்கு ஷை கோர்ட்டில் ரூ. 140—0—0 க்கு தாவா செய்து 15—12—48 தேதி போட்டிருக்கிறது. ஷை தேதியில் ஆக்ஷேபணையை தெரிவிக்க தவறினல் எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு ஏற்படும்.

S. R. நாருயணமூர்த்தி அய்யர்,
வாதி வக்கீல்.

23—11—48.

பிரிட்டனில் :

கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி

முன்பு ஒரு பிரபல வியாபாரியின் நாட்டுப்புற மாளிகையாயிருந்த லோபரோவிலுள்ள ஸ்டான்போர்ட் ஹால் என்ற கட்டிடம்தான் தற்போது பிரிட்டிஷ் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய கல்வி ஸ்தாபனமாக விளங்குகிறது. முதியோர் கல்விக்கான இக்கல்லூரியில் சுமார் 100 மாணவர்கள் கல்லூரியைச்சேர்ந்த ஹாஸ்டலிலேயே தங்கி கூட்டுறவுப்பயிற்சி பெற்று வருகின்றனர். இம் மாணவர்களில் அநேகர் கூட்டுறவு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் வெளி நாட்டினர். இவர்களும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் அதிகாரிகளோ அல்லது சிவில் உத்தியோகஸ்தர்களோ ஆவார்கள்.

வெளி நாட்டு மாணவர்களுள் 12 நபர்கள் குடியேற்ற நாடுகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள். 'காலனிகளில் கூட்டுறவு முறை' என்ற அறிக்கையில் சிபார்சு செய்துள்ளபடி இவர்களுக்கு ஒரு ஆறு மாதகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்குப் போதிக்கப்படும் விஷயங்களில் குடியேற்ற நாடுகள் கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பற்றிய பொது அறிவு, பொருளாதாரம், பிரிட்டனில் அபிவிருத்தியடைந்துள்ள கூட்டுறவு முறை, காமன் வெல்திலுள்ள சகல விதமான கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய விரிவான படிப்பு ஆகியவைகளும் அடங்கியுள்ளன.

வகுப்புகளில் நடைபெறும் உபந்யாசங்களைத்தவிர மாணவர்கள் பிரிட்டனிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு-முக்கியமாக விவசாய இதர கழகங்களுக்கு விஜயம் செய்து அவைகள் வேலை செய்யும் முறையை நேரில் கண்டறிகின்றனர். இவைகளை எல்லாவற்றையும் விட கலோனியல் மாணவர்கள் தங்களுடைய கூட்டாளி மாணவர்களுடன் அடிக்கடி நிகழ்த்தும் விவாதங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். கூட்டுறவு முறை அலுவல்கள் சம்பந்தமாக இதரர்களுக்குள்ள அனுபவங்களை பரிமாறிக்கொள்ளுவதில் மாணவர்கள் அதிக ஊக்கம் காட்டுகின்றனர். காமன்வெல்த் நாடுகள் முழுதுமுள்ள பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பற்றி பயிலும் போது சகோதர மாணவனிடமிருந்து கொள்ளும் இந்த அனுபவங்கள் பெரிதும் பயனளிப்பதையும் அவர்கள் நன்கு உணர்கின்றனர்.

இது ஒவ்வொரு நாடும் தனக்கென்று சொந்தமாக ஒரு கொள்கையையும் முறையையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மையை கைவிடுவதற்கான ஒரு வழிதுறையாகவே அமைந்திருப்பதால் இதுவே கல்லூரியில் நடைபெறும் பயிற்சியின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்ருகவிருக்கிறது. இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பிய பின் தங்களுடைய சமூக கூட்டுறவு இயக்கத்தின் வருங்கால தலைவர்களாக விளங்குவார்களென நம்பப்படுகிறது. அத்துடன் கல்லூரியில் தங்களுக்கு அறிமுகமான வேறு நாடுகளின் நண்பர்களுடன் நேரிடையாக தொடர்பு கொண்டு அபிப்பிராயங்களையும் பரிஸ்பரம் பரிமாறிக் கொள்ளமுடியும்.

கல்லூரி போதனைகளை மாணவர்கள் மிக்க கவனத்துடன் பயில வேண்டியிருக்கிறது. கல்லூரியில் மாணவர்களுக்கு சகல விதமான சுதந்திரங்களும் அளிக்கப் பட்டிருக்கின்றன. மாணவர்களிடையே அந்நியோன்ய பாவமும் நிலவி வருகிறது. மாணவர்களின் பொழுது போக்கு வசதிகளாக இக்கல்லூரியில் ஒரு நல்ல நூல் நிலயமும் பிரம்மாண்டமான நாடகமண்டபமொன்றும், நீந்தும் குளமும் இருக்கின்றன.

முகப்பில்

ஜெயபுரி காந்தி நகரத்தில் கூடவிருக்கும் காங்கிரஸ் சம்மேளனத்தின் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் இந்த வார இதழ் முகப்பில் காட்சியளிக்கிருர். பட்டாபியின் தலைமையின் கீழ் காங்கிரஸ் கட்சி புதியஊக்கமும், கொள்கையும் பற்றித் தொண்டாற்ற முயலும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகிறது.

நேயர்களுக்கு

'சிவாஜி'யின் அடுத்த 19—12—48 இதழிலிருந்து 'ரேகை சாஸ்திரம்' என்ற தலைப்பில் புதிய பகுதி ஒன்று துவங்கவிருக்கிறது. திரு. ரா. மாத்ருபூதம் இப்பகுதியில் பலவிதமான கைரேகைகளைப்பற்றிய சாஸ்திர ரீதியதன ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவார்.

—ஆசிரியர்.

நோட்டீஸ்

திருச்சி டி. மு. கோர்ட்டு

I. A. 501/48 O. S. 479/44

நன்னையன் செட்டியார் —வாதி

தி. கோ. சுண்ணும்புகாரத் தெரு 75 நெம்பர் கொப்பு ருமலிங்கம் வீட்டிலிருக்கும் பெல்லெ அழகிரி சாமி அய்யர் சம்சாரம் ஆண்டாளம்மாள் —7-ம் பிரதிவாதி.

தாவா சொத்துக்களில் வாதியின் வீதம் 5-ல் ஒரு பங்கு பிரித்துக் கொடுக்கவேணுமாகவும் பைனல் டிக்ரி செய்யவேணுமாகவும் கொடுத்திருக்கும்மனு 20-12-48 தேதி போடப்பட்டிருக்கிறது 7-ம் பிரதிவாதிக்கு உள்ள ஆக்ஷேபணையை அன்று கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம். ஆஜருகாவிட்டால் Exparte-யாக தீர்மானிக்கப்படும்.

(Sd) R. SESHADRI
Advocate for Plaintiff
11-12-48 Trichinopoly.

விலாச மாற்றம்:-

திருக்கோயிலூர் ரேடியோ புகழ்
சங்கீதம் S. அலமேலு

தற்போதைய விலாசம் S அலமேலு C/o சுப்ரமண்ய தீக்ஷதர், 55 பெரிய செட்டி தெரு, திருச்சி.

கச்சேரிகளுக்கும், டியூஷன்களுக்கும் மேற்படி விலாசத்திற்கு எழுதிதெரிந்துகொள்ளக் கோருகிருர்.

சிவாஜி

சந்தா விபரம்

வருட சந்தா ரூ. 7—0—0

ஆறு மாதம் ரூ. 3—8—0

மலேயாவில் தனிப்பிரதி 3 அணு

சுதந்திர இந்தியாவில் தேசிய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

கல் சிலேட்டுகள், சாதா, கிளச், ஸ்டோன் பாலிஷ் எல்லா சைஸ்களிலும் வியாபாரிகளுக்கு சப்ளை செய்யப்படும்.

பாபு இண்டஸ்ட்ரீஸ்
டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சிருப்பள்ளி.

பெங்களூர் காஞ்சிவரம் பட்டு சேலைகள் பனாஸ் ஜரிகை புட்டா தார்பாளு சேலைகள், பேன்ஸி சில்க் வாயில் ரகங்கள், மில் ஜவுளிகள், கைத்தறி ஜவுளிகள், ட்வீட்டு சில்க் கோடிங் ஷர்டிங் முதலியவை விலை சகாயமாய் கிடைக்கும்.

SLATE MANUFACTURERS & FANCY PIECE GOODS & SILK CLOTH MERCHANTS

தந்தி விலாசம் :—'கோகுல்' Estd. 1909
போன் நெ. 57 Branch : MANNARGUDI

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம்,
அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல்
வத்தி தனுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.



ஜெமினி சக்ரதாரி
புராண, சமூகப் படம்

இப்படி ஒரு படமா என்று கேட்கிறீர்கள். ஆம் என்று கூறுகிறேன்.

மண் வாசனை சிறிதுமின்றி, மாயாஜாலங்களும், அமானுஷீக சம்பவங்களும், பகவான் வந்து வந்து போவதுமே—புராணக் குப்பைகளாக மலிந்து வெறுக்கும் அளவுக்குப் புராணப்படங்கள் தமிழில் வெளி வந்துவிட்டன.

"சக்ரதாரி" படம் பௌராணிக சரிதம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அமானுஷீக நிகழ்ச்சிகள் நிறைந்திருந்தாலும் நம்முடைய மண் வாழ்வின் வாசனையிலிருந்து வெகுதூரம் விலகிப்போய் அந்தரத்தில் நின்று கொண்டுவிடவில்லை. பௌராணிகப் படங்களில் மனித உணர்ச்சிகளுக்கும் வேதனைகளுக்கும் இடமே யிராது. ஆனால் சக்ரதாரி நம்முடைய வாழ்வுடன்—இல்லறத்துடன்—அதன் இங்கிதமான வேதனைகளுடன்—நெருங்கிய தொடர்புகொண்டதாகச் சித்தரிக்கப்பட்டுச் சில இடங்களில் நம்மை விம்மச் செய்துவிடுகிறது.

கோராகும்பர் என்ற குலாலருடைய சரிதம் "சக்ரதாரி". அவர் பாண்டுரங்க பக்தர் பக்திப் பரவசத்தில் மெய்மறந்து அவர் மண் மிதித்துக் கொண்டிருக்கும்போது தனியே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை அந்த சேற்றில் சிக்கித் தந்தையின் கால்களில் மிதிபட்டு நசுக்குண்டு இறந்து மண்ணில் புதைந்து கலந்து விடுகிறது. அடுத்தவீட்டுக்குப் பால் வாங்கச் சென்ற தாய் திரும்பிவந்து பார்க்கும்போதுகூடக் கணவன் பரவசநிலையில் மண் மிதித்து ஆடிக்கொண்டிருக்கிறான். குழந்தையின் கதியைக் கண்டு தாய் அலறுகிறாள். சுயநினைவு வந்த கணவன் பாண்டுரங்க விக்ரஹத்தின் முன் சென்று கதறுகிறான். பாராக்காரர்கள் அரைகுறையாகக் கேட்ட அந்த ஓலத்திலிருந்து குழந்தை கொலை செய்யப்பட்டதை யூகித்து ஊர் திரட்டி வருகிறார்கள். பிள்ளைப் பாசமும் பதி பக்தியும் மனைவியைச் சங்கடத்திலாழ்த்துகின்றன. ஒரு நொடியில் அவள் தன்னை சமாளித்துக் கொண்டதுடன் உயிருடன் இருக்கும் கணவனுக்கு இழுக்கு வதும் நேராதவாறு சாகஸம் புரிகிறாள். பாராக்காரனும் ஊராரும் திரும்பிச் சென்றதும் அவளுடைய பிள்ளைப் பாசம் தலைதூக்குகிறது. இந்தக் கட்டத்தில் புஷ்பவல்லியின் நடிப்பு நம்மை மெய்மறந்து அவருடைய துயரத்தில் பங்குகொள்ளச் செய்கிறது.

பாண்டுரங்க பக்தியினால் தன் பிள்ளையைப் பறிகொடுக்க நேர்ந்த கொடுமையை எண்ணி விக்ரஹத்தை நாசம் செய்ய முனைகிறாள் மனைவி. பக்தரான கோராகும்பர் கட்டாரியைத் தூக்கி அவளை அடிக்க வருகிறார். பக்தி வெறியில் செய்கை இன்னதென்று அறியாமல் கையோங்கி நிற்கும் கணவனிடமிருந்து தற்காத்துக்கொள்ள வேறு வழியின்றி "பாண்டுரங்கன் ஆணையாக என்னைத் தொடாதீர்" என்று ஆணையிடுகிறாள். பக்தர் மந்திரத்தால் கட்டுண்டவர்போல் நிற்கிறார், விளைவு 'திருநீல கண்டர்" நிலைதான். வாழ்வின் இறுதிவரையில் மனைவியைத் தொடுவதில்லை யென்று ஆணையை ஏற்கிறார் கோராகும்பர்.

நிலைமை தணிந்தபிறகு கணவன் தன்னை இனித் தொடமாட்டான் என்பதை உணர்ந்ததும் மனைவியின் வேதனை அதிகமாகிறது இருந்த குழந்தையையும் இல்லற இன்பத்தை என்றைக்கும் இழந்துவிட்ட உண்மை அவளை வாட்டுகிறது. தன் தங்கையைக் கணவனுக்கு மணம் செய்து வைத்தாவது வீட்டில் ஒரு குழந்தை தவழ்ந்து விளையாட வழி செய்ய முனைகிறாள். மூத்த பெண்ணின் கோரிக்கையை ஏற்று இரண்டாவது பெண்ணையும் மணம் செய்து கொடுத்த தந்தை உண்மை நிலையை அறியாதவர். இரண்டு மனைவிகளையும் சமமாக நினைத்து நடத்தவேண்டுமென்று கோராகும்பரிடம் பாண்டுரங்கன்மீது ஆணையிட்டு வரம் பெற்றுக்கொள்கிறார். இவளையும் தொடமுடியாத சங்கடம் முளைக்கிறது.

இருவருடைய வாழ்வும் இப்படி பாழாகிவிடுகிறது. சகோதரிகள் ஒன்றாக இருந்து இந்த வேதனையை அனுபவிக்கும் இடம் நெஞ்சை யுருக்குகிறது. கோபத்தில் உரைத்த ஆணைக்குக் கோராகும்பர் தீவிரமான பொருள் கற்பித்துத் தங்களைத் தொடாமல் எட்ட நின்று வாழ்வதை மனைவியின் பகுத்தறிவு ஏற்கவில்லை. இவராகத்தானே தொடக் கூடாது, நாமே தொட்டுவிடுவோம் என்று தர்க்கவாதத்தின் விளைவாக இரவில் அவர் தூங்கும்போது போய்த் தொட்டுவிடுகிறார்கள். தன் விரத பங்கத்திற்குச் சகியாத கோராகும்பர் தன் கரங்களையே துணித்துக்கொள்கிறார். இப்படி எண்ணற்ற சோதனைகளில் கடைசியாகப் பாண்டுரங்கனே சேவகனாக வந்து பக்தருக்குப் பணிவிடை செய்து பல லீலைகள்புரிந்து இறுதியில் ஆட்கொள்கிறான்.

கடைத்தெருக் காட்சிகளில் நானாவித வாணிபங்கள் இசைச் சித்திரமாக அள்ளி வீசியிருப்பது நன்றாயிருக்கிறது. நாகையாவின் பக்திப் பரவச மெய்ப்பாடுகள் தமிழ்மக்கள் அறியாததல்ல. புஷ்பவல்லியும், தந்தையாக வருபவரும் நன்றாக நடிக்கிறார்கள் என்பதில் ஆச்சர்யமில்லை. படத்தின் காட்சித் தொடர்பும் ஒலித் தெளிவும், ஒளி வீச்சும், பின்னணி இசையும், காட்சி அமைப்புக்களும் ஜெமினியின் தனி முத்திரையுடன் பிரகாசிக்கின்றன.

பாடல்கள் நெஞ்சைத் தொடுகின்றன. கதையின் நடுக்கருத்து பக்தியின் பெருமையாக இருந்தபோதிலும் பாத்திரங்கள் மனோதத்துவ விளக்கங்களாகக் கலையழகுடன் இயங்குகின்றன. சம்பவங்களின் விறுவிறுப்பும் கதைப் போக்கும் சிக்கல் இல்லாமல் அனுயாசமாகத் திரையில் நிகழ்வதைப் பார்த்தால் ஒரே மூச்சில் வாழ்வு முழுவதையும் அப்படியே படம் எடுத்திருப்பதுபோல் சகஜமாக அமைந்திருக்கிறது. சமூகக் கதைகளின் உணர்ச்சிச் சித்திரமும் புராணக் கதைகளின் கடவுட் பெருமையும் ரஸ பேதமில்லாமல் இணைந்த கலவை 'சக்ரதாரி.' தமிழ்ப் படங்களில் ஆந்திர வாடையுடனும், செயிரற்ற கலைத்திறனுடனும் எடுக்கப்பட்ட ஒரு நல்லபடம் இது.

———

குத்து விளக்கு

"ரஸவாதி"

ஆபீஸிலிருந்து வந்த ராகவன் இன்னும் சட்டையைக் கூடக் கழற்றவில்லை, அதற்குள் "இங்கே வாருங்கோளேன். உங்களுக்கு ஒண்ணு வச்சிருக்கேன். பார்த்தால் ஆச்சரியப்படுவேள்" என்று கல்யாணி குதூகலத்துடன் சொன்னாள்.

"அட! அதுஎன்ன அது, அவ்வளவு அற்புதமான சாமான்?" என்று கேட்டுக்கொண்டே ராகவன் அவளைப் பின் தொடர்ந்தான். நேரே பூஜை உள்ளில் நுழைந்ததும் சுவாமி படத்தின் கீழே ஒரே அச்சில் வார்க்கப்பட்டது போன்ற இரு குத்து விளக்குகள் பளபள வென்று தேய்க்கப்பட்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தன.

"என்ன, கல்யாணி, அம்மாவின் குத்து விளக்கு ஜோடி கிடைச்சுடுத்தா? எங்கே வாங்கினே? என்ன விலை?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைப் போட்டான் ராகவன்.

"இன்னிக்கு மத்யானம் அடுத்தகத்து ராஜத்தோடு கடைத்தெருவுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு கடையிலே இதைப் பார்த்தேன். நல்ல வெள்ளி. நம்ம குத்துவிளக்குக்கும் ஜோடிதான். பதிமூணு ரூபாய்னு சொன்னான். வேறே பேச்சில்லாமல் உடனே வாங்கிவிட்டேன். நன்னயிருக்கோல்லியோ?" என்றாள் கல்யாணி.

"பழைய விளக்கு பதிமூணு ரூபாக்கு வருகிறதா என்ன?" என்று கேட்டுக் கொண்டே ராகவன் விளக்கைக் கையில் எடுத்துப் பார்த்தான்.

அடி விளிம்பில் பொறித்திருந்த ஓர் எழுத்தைப் பார்த்தவுடன் அவன் திடுக்கிட்டுவிட்டான். சந்தேகமில்லை. அதுவும் அவன் தாயாரின் விளக்குதான். தன் தங்கையிடமிருந்த அந்த விளக்கு எப்படி கடைக்கு வந்தது என்று அவன் சிந்தனை செய்தான். அந்த விளக்கு அவனுடைய பழைய ஞாபகங்களைக் கிளப்பிவிட்டது.

(2)

ராகவனுடன் கூடப் பிறந்தது அவன் தங்கை சீதா ஒருத்திதான். சிறுவயதிலேயே தகப்பனாரை இழந்த ராகவன் கஷ்டப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்தவன். தன் தங்கையின் மேல் உயிரையே வைத்திருந்தான். தகுந்த வயதில் சீதாவை உள்ளூரிலேயே உறவில் கலியாணம் செய்து கொடுத்தான். உள்ளூரிலிருப்பதால் தன் அருமைத் தங்கையைப் பிரியாமலிருக்கலாம் என்று நினைத்தான் ராகவன். ஆனால் ராகவன் எவ்வளவு நல்ல மாதிரியோ அதற்கு நேர் எதிர் விதம் சீதாவின் குணம். கல்யாணிக்கும் அவளுக்கும் அடிக்கடித் தகராறு வரும். அவளுக்கேற்றாற்போலவே அவள் கணவன் கோபுவும் முன்கோபக்காரனாக இருந்தான். இப்படியிருக்கையில் திடீரென்று ராகவனின் தாயார் இறந்துவிட்டாள். ஈமக்கிரியைகளெல்லாம் முடிந்து எல்லோரும் அவரவர்கள் ஊருக்குக் கிளம்பும்போதுதான் சிறிய சண்டை ஒன்று ஏற்பட்டது. விஷயம் அப்படி ஒன்றும் பிரமாதமாக இல்லை. ராகவனின் தாயாரிடம் அழகான ஜோடிக் குத்துவிளக்குகள் இருந்தன. சீதா அவை இரண்டையும் தன்னிடம் கொடுத்துவிடும்படி கேட்டாள். தன் மாமியாரின் ஞாபகத்துக்கு ஏதாவது ஒரு சாமான் தனக்கு வேண்டுமென்றும் ஆகையால் அந்தக் குத்து விளக்குகளை ஆளுக்கொன்றாய் எடுத்துக்கொள்ளலாம் என்றும் கல்யாணி சொன்னாள். சீதா பிடிவாதமாய் அவை யிரண்டும் தனக்கு வேண்டுமென்றும் தன் தாயாருடையது தானே என்றும் வாதாடினாள். கல்யாணியும் விடவில்லை. தன் மாமியாருடைய பொருள்களில் தனக்கும் பாத்தியதை உண்டென்றும் ஆகவே இரு குத்து விளக்குகளையும் தர முடியாதென்றும் கூறிவிட்டாள். ஆகவே ஆக்ரோஷத்துடன் அந்த வெள்ளிக் குத்துவிளக்கை வாங்கிக் கொண்டு "இனிமேல் உங்கள் மூஞ்சியில் முழிப்பதில்லை" என்று சொல்லிவிட்டு சீதா போய்விட்டாள். இது அவளுடைய கணவன் கோபுவின் போதனை என்று பின்னால்தான் தெரிய வந்தது. ராகவன் பாவம்! யாருக்குப் பரிந்து பேசுவது என்று தெரியாமல் திண்டாடினான். அன்றிலிருந்து ஒரே ஊரிலேயே யிருந்தபோதிலும் அவர்கள் சந்தித்துக் கொள்ளவேயில்லை. தப்பித் தவறி கோவில் குளங்களில் பார்த்துவிட்டால் கூட முகத்தைத் திருப்பிக்கொண்டு போய் விடுவார்கள். ஆனால் கல்யாணி அவ்வளவு மோசமில்லை. சீதாவைப் பார்க்கவேண்டும், பேச வேண்டும் என்ற ஆவல் ராகவனைப்போல் அவளுக்கும் இருந்தது. ஆனால் சீதாவாக விலகிப் போகும்போது அவள் போய் பேசினால் நன்றாயிருக்காது என்று சும்மா யிருந்துவிட்டாள். வருஷம் இரண்டு ஆன போதிலும் சீதாவின் குணம் மாறவில்லை. சீதாவுக்குப் பெண் பிறந்தபோது போய்ப் பார்க்க வேண்டும் என்று ராகவனும் கல்யாணியும் ஆவலுடன் துடித்தனர். ஆனால் அழைக்காமலிருக்கும்போது போனால் அவமானப்பட வேண்டியிருந்தால் என்ன செய்வது என்று சும்மாயிருந்துவிட்டார்கள். அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் மூலம் அவர்களுடைய க்ஷேமலாபங்களை அறிந்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தனர்.

(3)

"ஏன் அப்படியேபிரமிச்சு நின்னுட்டேள்?" என்று கல்யாணி கேட்ட பிறகுதான் ராகவனுக்கு உணர்வு வந்தது. "கல்யாணி இதைப்பாத்தியா. இது சீதாவினிடம் இருந்தவிளக்குத்தான். எப்படிக்கடைக்குப் போச்சோ தெரியல்லே. அவா சமாசாரம் தெரிஞ்சே ஒரு வாரத்துக்குமேலே ஆச்சே" என்று வருந்தினான் ராகவன். "அப்படியா, நான் அப்பவே சந்தேகப்பட்டேன்" என்று ஆச்சரியப்பட்டாள் கல்யாணி.

சிறிதுநேரம் இருவரும் பேசாமலிருந்தனர்.

"எனக்கொண்ணு தோன்றது" என்றாள் கல்யாணி.

"என்ன?" என்றான் ராகவன்.

"என்னதான் ஆயிரம் இருந்தாலும் நாம் சண்டைபோட்டுண்டு முகாலோபனம் இல்லாமல் இருக்கலாமா? அதனாலே பெரியவளா லக்ஷணமா நேரே நானேபோய் நாளன்னிக்குவரப் போகிற வரலக்ஷ்மி நோன்புக்கு அழைத்துவிட்டு வரப்போகிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள் கல்யாணி.

"உன் பேச்சுக்கு மறுபேச்சு நான் எப்போதாவது சொல்லியிருக்கிறேனா? அப்படியே செய்" என்றான் ராகவன் உத்சாகத்துடன்.

அன்றுமாலை ராகவன் வீட்டுக்கு வந்ததும் கல்யாணி தான் போய்விட்டுவந்த விவரத்தை அவனிடம் சொல்லிவிட்டாள்.

"அங்கே அவருக்கு நாலு நாளா ஜுரமாம். டைபாயிடு மாதிரியிருக்குன்னு டாக்டர் சொன்னாராம். கைக்குழந்தைக்கு வேற மாந்தம். வைத்தியச்செலவுக்காகக் குத்துவிளக்கை வித்தாளாம். நம்பகிட்ட வரணும்னு நினைச்சாளாம். ஆனால் உங்க மைத்துனர்தான் கூடாது என்று சொல்லிவிட்டாராம். நான்கூப்பிட்டதுக்கு சந்தோஷத்தோடே வரேன்னு சொன்னாள். அவர் குணம்கூட இப்போ திருந்தியிருக்கு" என்றாள்.

-(4)-

வரலக்ஷ்மி நோன்புமுடிந்தது. எல்லோரும் சாப்பிட்டான பின்பு கல்யாணி வெற்றிலைபாக்குத்தட்டுடன் வந்தாள். ராகவன் அவளைத்தனியே கூப்பிட்டு ஏதோசொன்னான். கல்யாணியும் தலையை அசைத்து சிரித்துக் கொண்டே உள்ளேபோனாள். வெற்றிலைபாக்கை வாங்கக் கையை நீட்டிய சீதா அதில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளும் வெள்ளிக் குத்துவிளக்குகள் இரண்டும் இருந்ததைக் கண்டாள். ஆச்சரியத்தினால் சீதாவின் கண்கள் அகன்றன.

*

எங்கும் கிடைக்கும்

மோட்டார் பிராண்ட் — நீலகிரித் தைலம்



தயாரிப்போர்:— ராஜூ & கோ

14 டபுள் தெரு.

சோழவந்தான் S. I. Ry

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தினகால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்

ஜோதி சோப் ஒர்க்ஸ், கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

60 வருடங்கள் புகழ்பெற்றது!

தரு தைலம்

பாம் அஞ்சனங்களின் அரசன்.

தலைவலி, ஜுரம், ஜன்னி, வாய்வுவலி, சுளுக்கு வலி, கட்டிகள் புறப்பாடு ஆகிய 210-வியாதிகளுக்கும் நிகரற்ற நிவாரணி!

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்

தரு மருந்து சாலை........திருச்சினுப்பள்ளி.

மைசூர் நிருபம்

மைசூர் அரசாங்கத்தின் ஊழல்களைப்பற்றிப் பொதுஜன அபிப்பிராயம் ஒருபுறமிருக்கட்டும்!— மைசூர் காங்கிரஸ் தலைவரான திரு டி. சித்தலிங்கையா அவர்களே பகிரங்கமாக அந்த வண்டவாளங்களை அம்பலப்படுத்தி வருகிறார்!... அதே ரீதியில், நியாய விசாரணையில் சர்க்காரின் தலையீடு கூடாதென்பதை 'கோபாலராவ் பாங்கு' வழக்கில் ஹைகோர்ட் பிரதம நீதிபதி ஜஸ்டிஸ் பரமசிவையா வற்புறுத்தினார். அதே காரணத்தினால் அவரைப் பலவந்தமாக 6 மாதகாலம் லீவு கொடுத்துப் பென்ஷனுடன் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்!... இந்த அநியாயத்தை சென்னை மாகாணப் பிரபல வக்கீல்கள் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது! இந்த நடவடிக்கையின் பின்னணியைப் பொதுமக்களின் திருஷ்டியில் படாமல் மறைக்க நமது சர்க்கார் அரும்பாடு பட்டு வருகிறது!...ஆனால் நடவடிக்கையின் அடிப்படைத் தத்துவம் நம் வரைக்கும் பகிரங்கரகசியந்தான்!

இதே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மந்திரி மண்டலத்தைத் திக்கு முக்காடச் செய்யும் நோக்கத்துடன் "பிரஜா மண்டலம்" எனும் எதிர்க்கட்சியொன்றை உருவாக்கப் பல வகுப்புவாதிகள் முனைந்து நிற்கிறார்!...

இதையெல்லாம் கவனித்த, அகில பாரத காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினரும், மைசூர் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினரும், மைசூர் ஜில்லா காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீ எம். எல். என். அரசு அவர்கள் 'இது மைசூருக்குக் கேடுகாலம்!... மைசூரின் எதிர்கால வாழ்வுக்குக் குந்தகம் விளைவிப்பது... மைசூரில் ஹைகோர்ட், சர்க்காரின் பிடியிலிருந்து விடுபடாத வரை எவ்வித நன்மையும் ஏற்பட வழியில்லை!...' என்று அறை கூவி யிருக்கிறார்!... ஆணையிட்டிருக்கிறார்!...

சிக்கபள்ளாபுரத்தில் உணவுப் பொருள் சப்ளை சரியில்லாத குறையை ஐயாயிரம் மக்கள் ஒன்று கூடி மந்திரிகள் எதிரில் முறையிட்டார்கள்!...பொதுஜன மந்திரிகள் போலீஸ் உதவிகொண்டு கூட்டத்தைக் கலைக்க முயற்சித்து ஒரு சிலரைக் காயப்படுத்தினார்கள்! ஆனாலும் அவர்கள் கலையவில்லை. மந்திரி சித்தையா காரின்மேல் நின்றுகொண்டு தமது வாக்கு வன்மையைச் சர்க்காரின் கட்சியை வாதிக்க உபயோகப்படுத்தினார்...எதிர்ப்பு பலமாயிற்று!... பின்பு "எனக்கொன்றும் தெரியாது!'... நீங்களெல்லாம் உணவு மந்திரி கே. வி. ரெட்டியவர்களைப் பேட்டி காணுங்கள்!" என்று கூறி தலை தப்பியது தம்பிரான்புண்ணியமாகக் காரில் பறந்து மறைந்தார். கூட்டம் பிரதமர் தங்கியிருந்த முகாமுக்குச் சென்று, முன்பே அவர்கள் கம்பி நீட்டிவிட்டதால் ஏமாந்து திரும்பியது!...

சென்னை மாஜி ரெவினியூ மந்திரி கே. ஆர். காந்த் அவர்கள் எங்கள் மந்திரிகளைப்பற்றி—"நம் மந்திரிகள் பகிரங்க விசாரணைக்குப் பயப்படக் கூடாது!..." என்று தைரியஞ் சொல்வதுபோல் மட்டந்தட்டிப் பேசியிருக்கிறார்!

மைசூர் காங்கிரஸ் தலைவர், டி. சித்தலிங்கய்யா ஒருபுறம் மந்திரி மண்டலத்தைப்பற்றி உள்ளது உள்ளபடி விவரிப்பதை, மைசூர் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் (கொழுத்த பணக்காரர்) எஸ். சென்னையா அவர்கள் மற்றொருபுறம் வன்மையாகக் கண்டித்து வருகிறார்!...அவர் தமது தலைவரிடம் வைத்திருக்கும் மதிப்புக்கு ஓரளவு அதிகமாகவே அவரிடம் பொதுஜனம் மதிப்பு வைத்திருக்கிறது!...இதை அவர் ஏனோ மறந்துவிடுகிறார்!...பிரசார மூலம் உண்மையை மறைக்க முயலும் போது உண்மை மேலும் சிறிது வலுப்படுகிறது என்பதை அவர் இனியாவது உணர வேண்டும்!

இதைப்பற்றிப் "பௌரவாணி" எனும் பிரபல கன்னடத் தினசரி துணிந்து தலையங்கம் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது!...

"ரஞ்சினி"

அபிஸீனிய நைட்டிங்கேல்

லண்டனிலுள்ள செய்மவுர் மண்டபத்தில் ஒருவிசேஷ சந்தையை திறந்துவைத்துப் பேசிய மிஸ் ஸில்வியா பாங்க்ஹர்ஸ்ட் எதியோப்பியாவின் இளவரசி ஸகாயை பிளாரன்ஸ் நைட்டிங்கேலுக்கு ஒப்பிட்டார். இளவரசி ஸகாய் ஞாபகார்த்த ஆஸ்பத்திரிக்கு நிதி திரட்டவே மேற்படி சந்தை நடத்தப்பட்டது. இந்நிதிக்கு பணம் திரட்டுவதில் பாங்க்ஹர்ஸ்ட் அம்மையார் நெடுநாட்களாகவே சலியாது உழைத்து வருகிறார். இந்நிதிக்கு பிரிட்டனில் தற்போது 6000 ஆதரவாளர்கள் இருப்பதாகவும் அவர் வெளியிட்டார். இந்நிதியைக்கொண்டு திறக்கப்பட விருக்கும் புது ஆஸ்பத்திரி எதியோப்பிய பெண்களுக்கு நர்ஸிங் தொழிலை கற்பதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கும்.

நாவலாசிரியர் வைரவிழா

சென்ற நவம்பர் 21-ம் தேதி இராமநாதபுரத்துக்கு சமீபம் திருப்புல்லாணியிலே சைதாப்பேட்டை பிரபல நாவலாசிரியரும் பொது ஜன சேவையில் ஈடுபட்டுழைத்துவரும் பெரியாருமான திரு ஜெ. ஆர். ரங்கராஜுவின் 75-வது ஆண்டு வைரவிழாக் கொண்டாட்டம் இராஜபாளையம் திரு பலராமராஜு தலைமையில் நடைபெற்றது. ரங்கராஜுக்கு திருவனந்தபுரம் இன்ஜினீயர் திரு ஜி. வி. ராஜு ஓர் வெள்ளித்தாளில் வாழ்த்து சாஸனம் வாசித்தளித்தார்.

சினிமாச் செய்திகள்

'யுனெஸ்கோ'வில்

"யுனெஸ்கோ" வின் லட்சியங்களும், நோக்கங்களும் ஈடேற கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவை பற்றிய சிறு சினிமாப் படங்களை "யுனெஸ்கோ" தெரிந்தெடுக்க வேண்டுமென்று "யுனெஸ்கோ" வுக்குப் சிபாரிசு செய்து பேய்ரூட் மாநாட்டில் இந்தியா கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. "யுனெஸ்கோ"வே அத்தகைய படங்களை வாங்கி, சினிமாப்படங்களின் மத்திய நிலையமொன்றை ஏற்படுத்தி, இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு அவைகள் வேண்டும்போது வாடகைக்குக் கொடுத்துவர வேண்டுமென்றும், வாடகைப் பணத்தை அந்தந்த நாட்டு நாணயமாகவே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்தத்தீர்மானம் சிபாரிசு செய்கிறது.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த பி. அஜிம் ஹுஸேன் பாமர மக்களுக்குக் கல்வி போதிக்கும் விஷயத்தில சினிமாப்படம் மிக முக்கியமான சாதனமென்பதை வற்புறுத்திக் கூறினார். இத்தகைய படங்கள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் ஜனங்களுக்கு முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற சாதனமாக இருந்து வருவது மட்டுமல்லாமல் பாமர மக்களிடையே கல்வியறிவின்மையை அகற்றுவதற்கும் சிறந்த சாதனமாக விளங்குகிறது என்று அவர் கூறினார்.

மேலும் கல்விப் படங்களை சர்வதேச அடிப்படையில் விநியோகிக்க ஏற்பாடு செய்ய முடிந்தால், உயர்தரமான படங்களை குறைந்த செலவில் ஏராளமாகத் தயாரிப்பது சாத்தியமாகும். இத்தகைய படங்கள் அதிகம் தேவையாயுள்ள பிரதேசங்களான ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும், போதிய லாபம் கிடைக்காதது காரணமாகவும் உற்பத்தி செய்வதிலுள்ள கஷ்டங்கள் காரணமாகவும் இப்படங்கள் உற்பத்தி செய்யப்படுவதேயில்லை. ஆகையால் கல்விப் படங்களை மதிப்பிட்டுப் பாகுபாடு செய்து எல்லா நாடுகளுக்கும் அவை கிடைக்கும்படி செய்யும் வேலையை "யுனெஸ்கோ"வே மேற்கொள்வது அவசியமாகும். இந்தப் படங்கள் சுலபமாக விநியோகமாகும் பொருட்டு, "யுனெஸ்கோ"வினால் அங்கீகரிக்கப்பட்ட கல்விப் படங்கள் விஷயத்தில் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகளோ, சுங்க வரியோ விதிக்கக்கூடாதென்று எல்லா நாடுகளும் கேட்டுக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இந்தியாவின் தீர்மானம் சிபாரிசு செய்தது.

நடிகர் உயர்ந்தார்

48 வயதுள்ள அலிஸ்டர்ஸிம் என்னும் பிரபல ஸ்காட்டிஷ் நடிகர் எடின்பர்க் சர்வகலாசாலையின் லார்டு ரெக்டராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். இப்பதவிக்காக நடைபெற்ற தேர்தலில் ஸிம் அவர்களுக்கு 2000 வோட்டுகளும், இவருக்கெதிராக நின்ற நபருக்கு 800 வோட்டுகளுமே கிடைத்தன.

பிரபல சினிமா, நாடக நடிகரென்ற ஹோதாவில் இவர் இங்கிலாந்தில் பிரபல்யமடைந்திருந்தபோதிலும் ஒரு சமயம் இவர் எடின்பர்க் சர்வகலாசாலையில் மாணவராக இருந்திருக்கிறார்.

ஜேம்ஸ் பிரிடி அவர்களின் "தி அனாடமிஸ்ட்" என்ற நாடகத்தில் தோன்றுவதற்கு முந்திய தினம்தான் இவருடைய தேர்தல் வெற்றி வெளியாகியது. இந் நாடகத்தில் மிஸ்டர் ஸிம் எடின்பர்க் சர்வகலாசாலையின் உடற்கூறு நிபுணராக நடிக்கிறார்.

பெண்

சென்ற நவம்பர் 26-ம் தேதியன்று காரைக்குடி ஷண்முக விலாஸ் தியேட்டரில் ஸ்ரீதேவி நாடக சபையாரால் மதுரை ரா வெங்கடாசலம் அவர்கள் எழுதிய "பெண்" என்ற நாடகம் அரங்கேற்றப் பெற்றது. பல பிரமுகர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

புதிய படம்

அரவிந்த புரடக்ஷன்ஸார் தங்கள் புதுப்படத்தின் பெயரை அறிவித்து விட்டார்கள். கவி 'காளிதாசன்'என்பதுதான் படம். டி. ஆர். மகாலிங்கம், என். சி. வசந்தகோகிலம், சகஸ்ரநாமம், ராமச்சந்திரன் முதலியோர் பிரதம பாகத்தில் தோன்றுவார்கள்

அமிர்தாஞ்சன்
சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்
அமிர்தாஞ்சன் லிமிடெட்.,
சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

TRADE MARK
CVR
"குவாலிடி காப்பி
திருச்சி.

'மதமும்' சளைக்கவில்லை 'அரசியலும்' சளைக்கவில்லை

நாளைக்கு நமது நம்பிக்கைகளும், முன்னால் ஒரு "மூட" அடைமொழியை சேர்த்துக் கொண்டுவிடும்.

மேற்கே பூமி தட்டையாயிருக்கிறதென்றும், சூரியன் பூமியைச்சுற்றி வருகிறதென்றும் ஒருகாலத்தில் நம்பி வந்தார்கள். எப்படி நம்பினார்கள்? யாரோ ஒரு அந்தக்காலத்து அறிவாளி சொல்லி நம்பினார்கள். எல்லோரும் பூமியின் உருவத்தைத் தாமேகண்டுபிடித்துக்கொள்ளப் பொழுதோ, புத்திசாலித்தனமோ இல்லையாகையால் அவர் சொல்வதை நம்பினார்கள்.

திடீரென்று ஒருநாள் யாரோ ஒருவர் தோன்றி பூமி உருண்டைதான், தட்டையில்லை என்று கூறிவிட்டார். நியூடன் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருப்பதாக சொன்னவுடன் அதையும் நம்ப ஆரம்பித்தார்கள்.

நான் பூமி உருண்டையாயிருப்பதைக் கண்ணால் பார்த்ததில்லை. அமெச்சூர் பகுத்தறிவாளர்களும் நேரே கண்ணால் பார்த்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். நியூடன் 'லத்தீன்' மொழியில் தம் புத்தகத்தை எழுதினார் என்று முக்காலே மூன்றுவிசம் பேருக்குத் தெரியாது. நியூடனிடம் நேரே போய் ஒவ்வொருவரும் நிரூபணம் கேட்டுக்கொண்டு வரவில்லை. குறைந்த பட்சம் நான் போனதில்லை. எப்படியோ, இன்றைய பாஷன் நியூடனை நம்புவது. நானும் நம்புகிறேன். அமெச்சூர் பகுத்தறிவாளரும் நம்புகிறார். ஆனால் 'நம்புவது' என்ற பதம் அவருக்குப் பிடிக்காததால் 'விஞ்ஞான ரீதி' யாக நியூடன் கண்டுபிடித்துவிட்டதாகச் சொல்லிக்கொள்கிறார். சொல்லட்டும்; நான் தடுக்கவில்லை. இதேபோல் அந்தக் காலத்துக்குத் தெரிந்த விஞ்ஞான ரீதியாக அவர்கள் நம்பினதாக அனுமதித்துவிடலாமே என்றுதான் நான் கூறுகிறேன். அவர்களுக்கு 'மூடப்பட்டம்' கட்டுவதில் என்ன பிரமாதமான வெற்றி இருக்கிறது!

பழைய கிறிஸ்தவக் கணக்கின்படி சூரியன் பூமியிலிருந்து ஏழு மைல்களோ அல்லது அதன் மடங்கோ இருந்ததாக அப்போது நம்பிவந்தார்கள். இப்போது மிலியன்களில் கணக்கிடுவது பாஷனாகியிருக்கிறது. இரண்டு சகாப்தங்களிலும் அளந்து பார்த்தவர்கள் கிடையாது. யாரோ ஓரிருவர் தாங்கள் வைத்துக்கொண்ட ஏதோ அடிப்படைகளைக் கொண்டு கூறியதை நம்பிவருகிறார்கள்.

ஒரு குண்டூசி நுனியில் எத்தனை தேவதைகள் நடனமாட முடியும் என்று அந்தக் காலத்தில் சண்டைகள் நடந்ததுண்டு. இந்தக்காலத்தில் ஒரு குண்டூசி நுனியில் எத்தனை கிருமிகள் வாசம் செய்யமுடியும் என்பது பற்றி சண்டைகள் நடக்கின்றன.

தேவதைகளும், கிருமிகளும்

மருத்துவ நம்பிக்கைகள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வெந்நீரை மந்திரம் போட்டு சாப்பிட்டால் வியாதி குணமாகும் என்று அந்தக் காலத்து 'மடையர்கள்' நம்பினார்கள். ஜான்சன் அண் கோ தயாரித்த வைடமின் எப் டாப்லெட்டுக்காக இன்றைய 'புத்திசாலிகள்' க்யூவில் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் ராமருக்குக் கோயில் கட்டிவைத்தார்கள். இன்று மகாத்மா காந்திக்குக் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக்காலத்தில் ராஜாக்கள் கடவுளின் பேரால் வனபோஜனம் நடத்தினார்கள். இந்தக் காலத்தில் அரசாங்கத்தின் பேரால் அம்பாசடர்கள் விஸ்கி, பிராந்தி சகிதம் டின்னர் நடத்துகிறார்கள்.

மதத்தைப் பற்றி ஒன்றும் புரியாதவர்கள் ஏசு கிருஸ்துவின் பிறவியைப்பற்றியும், ராம ஜனனத்தைப் பற்றியும் அன்றும், இன்றும் சண்டைபோட்டுக் கொள்வது மடத்தனம்—ஆனால் "கம்யூனிஸம்" "முதலாளித்துவம்" "ஏகாதிபத்தியம்" என்ற பதங்களுக்கு அர்த்தமே புரியாதவர்கள் கட்சிகளாகப் பிரிந்து அடித்துக்கொள்வது புத்திசாலித்தனம்—இது இன்றைய கூற்று.

தலையில் "பெருமாள் தீர்த்தம்" தெளித்துக்கொண்டால் உடம்புக்கு நல்லது என்று ஒரு சிலர் நம்புகிறார்கள். 'இனகுலேஷன்' பண்ணிக்கொண்டால் வியாதி குணமாகிவிடுமென்று வேறு சிலர் நம்புகிறார்கள். (இரண்டையும் நம்புவோரும் உண்டு).

அமெச்சூர் பகுத்தறிவாளர்கள் ஈ.வே.ரா. சொல்வதெல்லாம் வேத வாக்கென்று நம்புகிறார்கள். காந்தி பக்தர்கள் காந்தி தும்மினால்கூட அதற்கு அர்த்தம் கற்பித்து அதை நம்புகிறார்கள்.

ஆகாயம் ஏன் நீலமாயிருக்கிறது என்று அந்தக் காலத்துக் குழந்தை கேட்டபோது தகப்பனார் கடவுளின் ஆடை விரித்திருக்கிறது என்று சொன்னார். இன்றைக்கு அதே தகப்பனார் இருந்திருந்தால் 'ஒளி' சம்மந்தமாகத் தாம் நம்பும் கதையைச் சொல்லிவிட்டு 'விஞ்ஞான' கௌரவத்துடன் தலையைத் தூக்கிக் கொண்டிருப்பார்.

இராவணனுக்குப் பத்துதலை நிச்சயமாக இருக்கிறதென்றும், பிரம்மாவுக்கு நான்கு முகமென்றும், கடவுள் தலைக்கு மேலே கண்மறைவாக ஈஸிசேரில் சாய்ந்திருக்கிறவரென்றும் நம்பிவிட்டதனால் ரேஷன் அரிசியையும், காரியாலய காகிதங்களையும், தங்கள் சொக்காய்களையும் கவனிக்காமல் இருந்து யாரும் கெட்டுப்போய்விடவில்லை. அமெச்சூர் பகுத்தறிவாளர்கள் பூமி உருண்டையாயிருக்கிறதென்றும், கடவுள் இல்லையென்றும் 'கண்டுபிடித்து' எதும் லாபம் அடைந்துவிடவில்லை.

கடவுளின் பேராலும், மதத்தின்பேராலும் நல்ல காரியங்களையும், ஒழுக்கங்களையும் கற்பித்தவர்களும் உண்டு, தீங்கு செய்தவர்களும் உண்டு. இன்றைக்கு மருத்துவத்தின்பேரால், விஞ்ஞானத்தின்பேரால் நல்லது செய்வதும் உண்டு, கெட்டது செய்வதும் உண்டு. கெட்டதே என்றும் அதிகமாயிருந்திருப்பதால் மனித குலம் உருப்படாமல்போய்விட்டது. எனவே அந்த நம்பிக்கை மூடநம்பிக்கை, இது நன்னம்பிக்கை என்று தர்க்கம் செய்துகொண்டு பொழுதை ஆபாசமான முறையில் போக்கிக்கொண்டிருப்பதும், இந்த நம்பிக்கைகளுக்கும் கடவுட் தத்துவத்துக்கும் ஏதோ சம்மந்தம் இருப்பதுபோல் நினைத்துக் கொண்டு விசனப்படுவதும் அவிவேகம்.

"கான்பூஷியஸ்" ஏதோ ஒன்றைக் கூறியதற்காக மாபாவியாகக் கருதப்பட்டதாகவும், மதத்தின் 'மூடநம்பிக்கைகள்' பேரால் பலர் எரிக்கப்பட்டதாகவும் அமெச்சூர் பகுத்தறிவாளர் விசனப்படுகிறார். இன்று ஜப்பானில் சர்வதேச நீதியின் பேரால் பல ஜப்பானியர்கள் உயிர்விட வேண்டியிருக்கிறது. ஊசி குத்தல் வேண்டாமென்று சொன்னதற்காக இங்கிலாந்தில் சென்ற நூற்றாண்டில் பெக்யூலியர் வகுப்பார் சிறையிடைக்கப்பட்டார்கள். எதிரி சைன்யத்தில் காயமடைந்தவர்களுக்கும் சிகிச்சைசெய்வேன் என்று சொன்னதற்காக ஒரு மாது சென்ற நூற்றாண்டில் எரிக்கப்பட்டாள்.

இந்திய தேசீய சேனை வீரர்களை தண்டனை செய்வது நியாயம் என்று வெள்ளைக்காரர்கள் நினைத்தார்கள். ரஸ்விகளை தண்டிக்கவேண்டும் என்று நாம் நினைக்கிறோம்.

எனவே இத்தகைய விஷயங்களின் நியாயங்களைப் பரிசீலனை செய்தோமானால் நமது மூதாதையர்கள் முட்டாள்கள் என்று கண்டுபிடிப்பதைப்போல நம்மையும் முட்டாள்கள் என்று கண்டுபிடிக்கவேண்டியிருக்கும். எனவே இத்தகைய சச்சரவுகளை விட்டு விட்டு உருப்படியான வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவது நல்லது. ஆகவே 'கட்டுக்கதைகளை நெட்டுருச் செய்து ஒப்புவிக்கும் கலாரசிகர்களும்', விஞ்ஞானக் கதைகளை நெட்டுருச்செய்யாமல் வாந்தியெடுக்கும் விஞ்ஞானிகளும் சண்டையிட வேண்டியதில்லை.

ஒரு சிறிய விஷயம். "பர்னட்ஷா வேண்டுமென்று சொல்கிறாயே—வால்மீகரும், வசிஷ்டரும், கம்பரும், காளிதாஸனும் போதவில்லையா' என்று வெற்றிக்களிப்புடன் கேட்கிறார் அமெச்சூர் பகுத்தறிவாளர்.

பர்னட்ஷா புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. ஏசு கிறிஸ்துவும், வால்மீகர்களும், புருஷஸூக்தமும் சொன்னதை உங்களுடையவும் என்னுடையவும் புதிய பாஷனுக்குத் தகுந்தபடியாக புதிய வார்த்தைகளைப் போட்டுக் கூறுகிறார். இதை அவரே ஒப்புக்கொள்கிறார்.

இன்றைக்கு ஏராளமான பூதக் கண்ணாடிகளையும், யந்திரங்களையும், வைத்துக்கொண்டு உயிர் சக்தி அழிவற்று, மாணமற்று தொடர்ச்சியாக நிலவி வருகிறது என்று ஒப்புக் கொள்கிறார்கள். பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் புருஷஸூக்த ஆசிரியர் "புருஷ ஏவ இதம் ஸர்வம்", "அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வியாப்ய நாராயண ஸ்திதஹ", "ஸஹஸ்ர சீர்ஷா புருஷஹ ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" என்று கூறினது நமக்குத் தெரியாது—புரியவில்லை—பிடிக்கவில்லை! இன்றைக்கு இதையே "வைடலிஸம்" என்கிறார்கள்.

அப்படியானால் பழைய நம்பிக்கை புதிய நம்பிக்கை எல்லாம் ஒன்றுதானே என்று அமெச்சூர் பகுத்தறிவாளர் கண்சிமிட்ட வேண்டாம். அந்தந்த நம்பிக்கைகள் அந்தந்தக் காலத்தில் சரியாக ஒருசாராருக்கும், சீர்திருத்தப்பட வேண்டியதாக அந்தந்தக் காலத்து அமெச்சூர் பகுத்தறிவாளருக்கும் தோன்றத்தான் செய்தன—செய்கின்றன.

எனவே 'வைடலிஸமும்', 'அல்லோபதியும்', 'பூதக் கண்ணாடியும்' நமது பாஷனாகையால் இவற்றை உபயோகித்து புராணங்களை விளக்கக்கூடிய ஷாக்கள் தேவையென்று நான் கூறினேன். அடிப்படையைத் தகர்க்கவல்ல. அறிவுக்கு விளக்கம் கூற. நமது பழைய கதைகள் "அறுவறுக்கத்தக்கனவாயிற்றே" அவற்றைப் போர்த்தி மூட வேண்டுமேயென்ற கருணையினாலோ, அவற்றின் "ஆபாசங்களை" அகற்றிவிட வேண்டுமென்று "பெரியமனது" பண்ணியோ அல்ல. தவிர்க்கமுடியாத நம்பிக்கைகளில்—பாஷன்களில்—சிக்கித் தவிக்கும் பண்பு படைத்துவிட்ட மனித குலத்தின் இன்றைய தலைமுறையில் இருக்கும் மக்களுக்கு ஏற்ற விளக்கங்கள் வேண்டுமேயென்ற—கலைஞனுக்கு இயற்கையாக உள்ள—கருணையினால். இதை அபயக்குரலொலியாகக் கொள்வதில் ஆட்சேபணையில்லை.

—"ஸ்ரீ"

ஆசிரியருக்குக் கடிதம் :

விவசாயப் பயிற்சி

சர்க்காரின் திட்டங்கள்

அதிகாரிகளின் அக்கறை !

சில புள்ளி விபரங்கள்

மத்தியசர்க்கார் அதிக உணவு உற்பத்திக்காக பல திட்டங்கள் வகுத்து அவைகளுக்காக பணம் செலவுசெய்தும் வருகிறார்கள். அவைகளில் ஒன்று ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் 20 விவசாயிகளை அழைத்துப்போய் அரசாங்கத்தால் நடத்தப்படும் பெரிய பண்ணைகளை காண்பித்துவர வேண்டுமென்று நியதி வகுத்திருக்கிறது. மற்ற நாடுகளிலும் குறிப்பாக அமெரிக்காபோன்ற பிரதேசங்களிலும் இது மாதிரி நடத்தி நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். நமது மாகாணத்திலும் இது சென்ற 2 வருஷங்களாக நடந்துவருகிறது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் எல்லா பயிர்களும் நன்றாக வளர்ந்திருக்கும் காலத்தில் 10 நாள்களுக்கு சுற்றுப் பிரயாணமாக அழைத்துப்போக வேண்டுமென்று திட்டம். இதற்காக போகவரச் செலவும் தினம் ரூ. 2/- படிச் செலவும் கொடுக்கிறார்கள்.

இதற்கிணங்க திருச்சி ஜில்லா விவசாய அதிகாரி எல்லா டிமான்ஸ்டிரேடர்களுக்கும் அந்தந்த தாலூகாவிலிருந்து விவசாயத்தில் ஊக்கமுள்ள 3 உழவர்களை பொறுக்கி அனுப்பும்படியாக சுற்றறிக்கை விட்டுக் கொண்டே வந்திருக்கிறார். ஆனால் நவம்பர் மாதம் வரையில் விவசாய டிமான்ஸ்டிரேடர்கள் யாரையும் பொறுக்கி சிபார்சு செய்ததாகத் தெரியவில்லை. நவம்பர் மாதம் 23-ம் தேதி இந்த ஜில்லாவிலிருந்து 11 பெயர்களை பொறுக்கி அழைத்துக்கொண்டு கோயம்புத்தூர் விவசாயப் பண்ணைக்கு அழைத்துப் போனார்கள். ஏனென்றால் நவம்பர் மாதமுடிவுக்குள் இந்த சுற்றுப் பிரயாணம் முடிந்துவிட வேண்டுமென்ற நிபந்தனை. மற்ற ஜில்லாக்களிலிருந்து இவ்வளவு பேர்கள்கூட வரவில்லை. எல்லா ஜில்லாக்களிலிருந்தும் கோயம்புத்தூர் பண்ணைக்கே ஒரே சமயத்தில் எல்லோரும் வந்திருந்தார்கள். அங்கே இடவசதியும் சாப்பாட்டு வசதியும் செய்வதும் கஷ்டமாகப் போய்விட்டது.

ஒவ்வொரு தாலூகாவிலிருந்தும் 3 பேர்கள் கூட விவசாயத்தில் ஊக்கமாக ஈடுபட்டவர்கள் சுற்றுப் பிரயாணத்திற்கு கிடைக்கவில்லையென்றால் அந்தந்த தாலூக்காக்களில் டிமான்ஸ் டிரேடர்களுக்கு விவசாயிகளுடன் எவ்வளவு தொடர்பு ஏற்பட்டிருக்கிறதென்று நன்றாக விளங்குகிறது. மேலும் மத்ய ஸர்க்கார் இந்த திட்டத்திற்கு எவ்வளவு உத்ஸாகத்துடன் பணம் செலவழிக்க முன்வந்தும் அதிகாரிகள் அதில் சிரத்தை காண்பிக்கவே இல்லையென்பதை வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. இதைப்போலவே மற்றும் சர்க்காரால் நிறுவப்படும் பல திட்டங்களையும் சில்லரை அதிகாரிகள் ச்ரத்தையுடன் நடத்த முன்வராததால் தான் பாழாகப் போகின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும்.

சா. சாம்பசிவம்.

லண்டன் இராப்பள்ளிகள்

இதற்கு முன்பிருந்ததைவிட தற்போது அதிகமான லண்டன் வாசிகள் இரவுப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். லண்டன் கவுண்டிகவுன்ஸிலினால் நடத்தப்படும் இம்மாலை நேர வகுப்புகளில் பயில பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்களின் தொகை கடந்த ஆண்டைவிட 20 சதவிகிதம் அதிகமாகும். அக்டோபர் மாத ஆரம்பத்தில் 95,200 நபர்கள் குளிர்கால போதனைகளுக்கென பதிவு செய்து கொண்டனர். இத்தொகையில் ஸ்திரீகளே— 287000 மாணவர்கள்-பிரதானம் வகிக்கின்றனர். ஸ்திரீகளின் இத்தொகை கடந்த ஆண்டிலிருந்ததைவிட 17 சதவிகிதம் அதிகமாகும். ஆண்களின் மொத்த எண்ணிக்கை 10,800. இது கடந்த வருட இதே குளிர்கால எண்ணிக்கையைவிட 28 சதவிகிதம் அதிகமாகும். ஜூனியர் நபர்களுக்கான கழகங்களில் தான் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இராப்பள்ளிகளில் புராதன கிரீக் முதல் தேனீ வளர்த்தல் வரையிலும் வெளிநாட்டு விவகாரங்கள் முதல் நடனம்வரை சகலமும் போதிக்கப்படுகின்றன.

பள்ளிக் கட்டிடங்கள்.

பள்ளிக்கூடங்களுக்கான கட்டிடங்கள்நிர்மாணிப்பதில் பிரிட்டன் புது முறைகளை கையாளப்போகிறது. இம்முறைகள் சமீபத்தில் பிரசுரமாகியுள்ள அறிக்கையொன்றில் விவரிக்கப்பட்டுள்ளன. இப்பிரச்னைகளை கவனிப்பதற்காக நிபுணர்களடங்கிய கமிட்டியொன்றை நிறுவிய கல்வி மந்திரியான மிஸ்டர் டாம்லின்ஸன் இதன் சிபார்சுகளை கொள்கைரீதியில் அங்கீகாரம் செய்துள்ளனர். அந்நிபுணர்களின் சிபார்சுகள் தான் "பள்ளிகளுக்கான கட்டிடநிர்மாண முறைகளைப் பற்றிய அறிக்கை" யென்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ளன.

கல்வி நிலையங்கள் நிர்மாணிப்பதென்ற நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டுமென்பதே இச்சிபார்சுகளின் முக்கிய நோக்கம். ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் தயாரித்துள்ள திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு 93,17 கோடி ரூபாய்வீதம் அடுத்த 15 வருடங்களுக்கு செலவழிக்க வேண்டியிருக்கும் 349 புது பள்ளிகள் நிர்மாணம், ஏற்கனவேயுள்ள பள்ளிக்கூடங்களின் விஸ்தரிப்புக்கு ஆன வேலைகள் ஆரம்பமாகிவிட்டதென்றும் கனம் கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

கட்டிடங்கள் நிர்மாணிப்பதில் ஒரு நிர்ணயமான முறையை வளைந்து கொடுக்கக்கூடியபடி கையாள்வது நலமென அக்கமிட்டியின் நிபுணர்கள் சிபார்சு செய்துள்ளனர். ரெடிமேட் கட்டிட சாமான்களை அதிகப்படியான அளவில் உற்பத்தி செய்வதற்கு 'ஆர்டர்'கள் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் யோசனை கூறியுள்ளனர். கட்டிடங்கள் அனைத்தும் ஒரே மாதிரியில் அமைக்கப்படுமென இதற்கு எவரும் பொருள் கொள்ளக்கூடாது. ஏனெனில் தொழிற்சாலைகள் பெரும் அளவில் உற்பத்தி செய்யும் கட்டிடசாமான்களை பல்வேறு வழிகளில் நம் விருப்பப்படி நிர்மாணித்துக் கொள்ளமுடியும்.

'நிர்ணய முறை' என்ற சிபார்சின் காரணமாக புதிதாக கட்டப்படும் பள்ளிகள் அனைத்தும் ஒரே மாதிரியில் அமைக்கப்படக் கூடுமென்ற அபாயத்தையும் கமிட்டி உணர்ந்துள்ளது. ஆகவே தான் பிரிட்டன் முழுவதும் ஒரேவிதமான பள்ளிக்கட்டிடங்களை நிர்மாணிக்கும் வகையில் இச்சிபார்சுகளை அமல் செய்யக்கூடாதென்றும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினால் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொக்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மாகாந்தி
சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற ! டானிக்

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

Printed at the Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka- Smithara (Editor).